உ

குமரன் துணை.

விவேகபாநு.

வால்யூம் 5. } 1906௵ ஜனவரி௴ { புத்தகம் 1.

நம் இளவரசரின் விஜயம்:

இவ்வருஷம் ஆரம்பமுதலே சந்தோஷத்தின்மேல்சந்தோஷமாய் விஷயங்கள் நிகழ்ந்துவருகின்றன. ஆரம்பத்தில் மகாமஹோபாத்தியாயர் என்ற பட்டப்பெயர் நம் தமிழ்வித்வச்சிகாமணியாகிய உ. வே. சாமிநாதையர் அவர்களுக்கு அளிக்கப்பட்டது. தமிழே அதனால் மிகச் சிறப்புற்றதினாலே தமிழர்களுக்கு அது பெருஞ்சந்தோஷத்தை உண்டாக்கிற்று. அதனினும் பெருஞ்சந்தோஷத்தை, நாம் இவ்வாரத்தில் அடைந்தோம். நம் இளவரசர் இளவரசி யாரோடு இம்மாதம் 24௳ புதன்கிழமை மாலை நம் சென்னைபுரிக்கு விஜயம்செய்தது எல்லலாருக்கும் பரமசந்தோஷத்தை உண்டாக்கிற்று. இதற்கு முன்பக்கத்திலுள்ள படத்தில் அத்தம்பதிகளுடைய உருவங்களைப்பார்க்கலாம். இதற்கு 30 வருஷங்களுக்குமுன்னர் இவரது தந்தையாரும் தற்காலம் நம்மையாளும் சக்கிரவர்த்தியுமாகிய 7-ம் எட்வர்ட் மன்னர் நம் நாட்டுக்கு இளவரசராக வந்தகாலத்தில் நம் சென்னை இராஜதானியின் முக்கியபட்டணங்களைப்பார்த்துச்சென்றார்கள். தற்காலம் விஜயமாயிருக்கும் நம் இளவரசர் அவர்களோ சென்னையைமட்டும் பார்த்துவிட்டுப்போகும்படியாகநேர்ந்திருப்பது நம் துர்ப்பாக்கியமே. அவர்களே மதுரை, திரிசிரபுரம், தஞ்சைமுதலிய அபூர்வபட்டணங்களைத் தாம் பார்க்கச் சந்தர்ப்பமில்லாததைக்குறித்து வருத்தங்காட்டிப் பேசியிருக்கிறார்கள். ரினௌன் என்ற கப்பலில் ஏறி இரங்கூனிலிருந்து புதன்கிழமைமாலை சென்னைத் துறைமுகத்தைச்சார்ந்தார்கள். துறைமுகம்வந்தவுடன் 31 பீரங்கி

வெடிகள் தீர்க்கப்பட்டன. நம் காருண்ய கவர்னராகிய ஆம்ட்ஹில் பிரபு அவர்கள் அவர்களைத் தம் பரிவாரத்துடன் எதிர்கொண்டழைத்துவரவேற்றூர்கள். துறைமுகம் மிக்க விமரிசையாய் அலங்கரிக்கப்பட்டிருந்தது. 150 கஜதூரம் அலங்கரிக்கப்பட்ட பந்தல்மார்க்கமாய் இளவரசரை இட்டுக்கொண்டு பிரத்தியேகமாய் அலங்காரம் செய்துவைத்திருக்கப்பட்ட கொட்டகையில் வீற்றிருக்கும்படி செய்தனர். அங்கு முனிசிபல் வந்தனோபசாரப்பத்திரிகை முனிசிபல் அக்ராசனாதிபதியால் வாசிக்கப்பட்டது. பின்னர் கௌன்ஸிலர்கள் ஒருவர்பின் ஒருவராக பேட்டிபண்ணிவைக்கப்பட்டனர். பின் அங்கிருந்து இளவரசர் கவர்ன்மெண்டு ஹௌஸுக்குப் புறப்பட்டனர். போகிறவழிகளெல்லாம் இராணுவச்சேனைகளும் போலீஸ்சேனைகளும் மிக்க ஒழுங்காய் நிறுத்தப்பட்டிருந்தன. நம் இளவரசரும் இளவரசியாரும் நான்கு குதிரைகள்பூட்டிய அலங்காரமான வண்டியில் ஏறிச்சென்றூர்கள். அதன்பின் நம் கவர்னரவர்களும் அவர் பெருமாட்டியும் நான்குகுதிரை சாரட்டில் சென்றூர்கள். அதைத் தொடர்ந்து ஐம்பது வண்டிகள் ஒழுங்காயும் கம்பீரமாகவும் சென்றன. அவரவர் அந்தஸ்துப்பிரகாரம் வண்டிகள் கம்பீரமாகவும் ஒழுங்காகவும் சென்றது மிக்க அழகாகவேயிருந்தது. கவர்னர் வண்டிக்கு அடுத்துக் கொச்சி மகாராஜா அவர்களின் வண்டியும் அதனையடுத்து நம்தமிழ்நாட்டுவேந்தராகிய புதுக்கோட்டை மன்னரது வண்டியும், 18-வது வண்டியாக நம் சேதுபதியவர்களின் வண்டியும் 36வது ஆக நம் [illegible]யபுரம் ஜமீன்தாரவர்கள் வண்டியும் அதனையடுத்து நம் சிவகங்கை ஜமீன்தாரவர்கள் வண்டியும் அந்தஸ்துமுறைப்படி சென்றன. அவ்விமரிசையைப் பார்க்கப் பதினுயிரங்கண்கள் வேண்டும். அப்பவனி லாகாலேஜ் மார்க்கமாய் வாலாஜா பாலத்துக்குச்சென்று பின் மன்ரோ பிரதிமையின்மார்க்கமாய்கவர்ன்மென்டுஹௌஸுக்குச்சென்ற அழகை என்னென்போம். போகும்வழியில் பள்ளிச்சிறுர்கள் இருமருங்கும் அலங்காரமாக, அவர்களுக்கென்று சவுக்குமரங்களாலும் பலகைகளாலும் சமைக்கப்பட்டிருந்த அடுக்குமேடையின் கண், உட்கார்த்தப்பட்டிருந்தது எல்லாவற்றினும் அதிசயிக்கத்தக்கதாகவேயிருந்தது. இந்தியாவின் எத்திசையிலும் இவ்வேற்பாடு செய்துவைக்கவில்லை. இக்காட்சியைக் கண்ணுற்ற இளவரசரும் அவ

ரது பெருமாட்டியும் பேரானந்தமடைந்தார்கள். போகிற மார்க்கத்தில் பல பந்தல்கள் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பட்டணம் முழுவதும் திரண்டு ஓரிடத்திற்கு வந்ததுபோல் திரள் திரளாய் ஜனங்கள்போய்க் கொண்டிருந்தார்கள். இதுவரை நம் சென்னைமாநகரத்தில் இத்துணை பெருங்கூட்டம் எக்காலத்திலும் கூடியதில்லையென்றே பலர் சொல்லுகிறார்கள். ஒக்ஸ் கம்பெனியார் தங்கள் வேலைக்காரர்களை ஒருங்குகூட்டி வைத்திருந்ததானது கண்ணுக்கினிய காட்சியாகவேயிருந்தது. அன்று நடந்த வாணகாட்சிகளும் நிகரற்றனவாகவே விளங்கின. பின்கவர்னரவர்கள் மாளிகையில் ஓர் தர்பார் நடந்தது. அதில் அனேகம் பிரபுக்கள் பேட்டிபண்ணிவைக்கப்பட்டார்கள். அடுத்ததினம்பெரிய குடித்தனக்காரருடைய வந்தனோபசார பத்திரிகை வாசிக்கப்பட்டது. அதற்குத்தக்கவண்ணம் மிக்க அநுதாபத்துடன் இளவரசர் மறுமொழி கூறினர். இதன்பின்னர் தீவில் நடந்த கொண்டாட்டம் மிக்கரம்மியமாயிருந்தது. இதில் நம் இராஜதானியின் வந்தனோபசார பத்திரிகை நம் நாட்டின் கண்மணியென விளங்கும் ஸர். எஸ். சுப்பிரமணியஐயரவர்களால் வாசிக்கப்பெற்றது. இம்மகானே 30 வருஷங்களுக்குமுன்னர் மதுரைமாநகரில் அக்காலத்து இளவரசரும் இக்காலத்து நம் சக்கிரவர்த்தியுமாகிய 7ம் எட்வர்ட் மன்னருக்கு வந்தனோபசாரபத்திரிகை வாசிக்கும்படியான ப்ராக்கியம் பெற்றிருந்தார்கள். இரு முறை இம்மகா பாக்கியம் ஒருவருக்குக் கிடைப்பது அரிதினும் அரிது. இம்மகான்போல் நம் இராஜதானியில் கௌரவம் பெற்றவர்கள் எவருமில்லையென்றே சொன்னாலும் மிகையாகாது. மதுரைஜில்லா வாசிகளுக்கு மாத்திரம் அன்று நம் இராஜதானிக்கே ஒரு பெருங்கௌரவம். இளவரசரும் அரசியாரும் அன்று அத்தியந்த ஆனந்தமடைந்தார்கள். பின் விக்டோரியா இன்ஸ்டிடியூட்டுக்கு அஸ்திவாரக்கல் நாட்டினதும் மிக்க விமரிசையாய் நடந்தேறியது. கடற்கரையோரமாய் ஒரு மாலை இளவரசர் பவனிவரும்பொழுது சென்னைக்கு விசேஷமான கட்டுமரங்களும் படவுகளும் தீபங்கள்தாங்கி ஒழுங்காய்க்கடற்கரையைச் சிறப்பித்த காட்சியானது கண்டோர் மனத்தையும் கண்களையும் கவர்ந்தன. ஐந்துநாளும் சென்னைமாநகரமுழுவதும் பெருந்திருவிழாக் கோண்டாட்டமாக இருந்தது. நாட்கூலி 35 ரூபாவுக்குக் குறைந்து குதிரைவண்டிகள் கிடைப்பது அரி

தாய்விட்டதென்றால் எத்தனை பிரபுக்கள் விஜயஞ்செய்திருப்பார்களென்றும் எத்தனை பணச்செலவு நடந்திருக்குமென்றும் இதனைப்படிப்பவர்களே ஊகித்துக்கொள்ளலாம். இளவரசருக்கு வந்தனோபசாரப்பத்திரிகைகள் கொடுக்குங்கால் அவற்றை நல்ல வேலைப்பாடுள்ள சிறு பெட்டகத்தில்வைத்துக்கொடுப்பது வழக்கம். மிராசுதார்கள் கொடுத்த பெட்டகம் மிக்க அழகுவாய்ந்திருந்தது. ஒருபக்கம் உழவன் உழுகிறவிதமாகவும் மற்றொருபக்கம் வயல்கள் இருக்கும் வண்ணமும் மற்றொருபக்கம் பனைமரங்களிருப்பதுபோலவும் வெகு நேர்த்தியாய் வெள்ளியில் வேலைப்பாடு செய்யப்பட்டிருந்தது. மகாஜனங்கள் கொடுத்த வந்தனோபசாரப்பத்திரிகைப் பெட்டகத்தில் ஸ்ரீராமர் வனத்தினின்றும் திரும்பிவந்தபொழுது ஜனங்கள் அவரை எதிர்கொண்டழைத்துச் சந்தோஷங்கொண்டாடியதுபோல் ஒரு சிற்பவேலை வெகு அழகாயமைக்கப்பட்டிருந்தது. இம்மாதிரியாய்க்கண்டோர் வியக்கும்வண்ணம் இத்திறமையான வேலைகளைச் செய்தவர்கள் புகழ்பெற்ற டாகர் கம்பெனியார். இளவரசரும் அரசியாரும் இவ்வேலைப்பாடுகளை நன்கு பரிசோதித்து அதில் காட்டப்பட்ட விஷயங்களைத் தெளிவாகக்கேட்டறிந்து ஆனந்தபரவசமானார்கள். இளவரசரவர்கள் தமக்கும் தம்மரசியாருக்கும் தென்னிந்தியா தேசத்தார் காட்டிய அன்பையும் விசுவாசத்தையும் புகழ்ந்துபேசியகாலத்தில் இவ்வன்புக்கும் விசுவாசத்திற்கும் நிகர் எங்குமே கண்டதில்லையென்றார்கள். இராஜவிசுவாசத்திலும் மதவிசுவாசத்திலும் தென்னிந்தியாவிலுள்ளவர்களுக்கு ஈடு எந்நாட்டிலும் காண்பதரிது. எவ்வித ஏற்பாடுகளும் விமரிசையாகவே செய்யப்பட்டிருந்தன. எல்லாம் விமரிசையாகவே நடந்து நிறைவேறின. அக்காலத்தில் நம் ஜனங்களுக்குண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. தெருக்கள்தோறும் வெள்ளம்போல் திரள் திரளாய் ஜனங்கள் மிக்க ஆரவாரத்துடன் அல்லும்பகலும் ஓயாமல் போய்க்கொண்டிருந்த காட்சியைக் காணாத கண் என்னகண்ணே. நம் இளவரசரும் இளவரசியாரும் நம் சென்னைமாநகரத்தில் நடந்த பல உண்டாட்டுக் களியாட்டங்களிலும் கூடியிருந்து குதூகலித்துத் திருப்தி கொண்டு மைசூர் இராஜ்யத்துக்கு விஜயஞ்செய்தார்கள். ஆங்கு நடக்கும் வைபவங்களைப்பற்றி அடுத்தமுறை எழுதுவோம். எல்லாம்வல்ல

ஈசன் இம்மகிழ்வுற்ற இத்தம்பதிகளுக்குத் தேக ஆரோக்கியத்தையும் மனமகிழ்ச்சியையும் என்றென்றைக்குமளித்து அவர்கள் நீடூழிகாலம் வாழும்வண்ணமும் பானுவைப்போல் எந்நாட்டிலும் அவர்கள் பேரும்புகழும் நிலைநிற்கும்வண்ணமும், கிருபைசெய்யும்படி அவரை நாம் பிரார்த்தனை செய்யவேண்டுவது நம்கடமை.

பத்திராதிபர்.

21-ம் காங்கிரெஸ்.

சென்ற காங்கிரஸிலும் இவ்வருஷ காங்கிரஸ் மிகச்சிறப்புப் பெற்றிருந்தது. ஹிந்துக்களுக் கெல்லாம் மிகவும் விசேஷமான காசி க்ஷேத்திரத்தின்கண்ணே இம்மகாசபை இவ்வருஷம் நடந்ததால் இப்பெருங்கூட்டம் கூட்ட இடமாயிற்றென்றாலும் தேசாபிமானத்தால் தூண்டப்பட்டே பலர்சென்று சிறப்பித்தார்கள். நம் நாட்டின் கஷ்ட நிஷ்டூரங்களை நம்மை ஆளும் ஆங்கிலேயருக்கு நேரில் தெரியப்படுத்தி அவர்கள் மூலமாய் அவைகளுக்கு ஒரு பரிகாரம் தேடவேண்டுமென்று ஊக்கமும் உற்சாகமுங்கொண்டு ஆங்கிலநாட்டுக்குச்சென்ற நம் கோகலே பெருமான் எண்ணின காரியத்தை இனிது முடித்துத் திரும்பி வந்து இவ்விருபத்தோராம் காங்கிரஸுக்குச் சபாநாயகராக வீற்றிருந்தார்கள். இவர்கள் சாமர்த்தியமும் பெருங் குணமும் செய்தொழில் ஊக்கமும் நம் நாட்டார் நன்கு அறிந்த விஷயமாகையால் அவைகளைப்பற்றி நாம் அதிகம் கூறவேண்டுவதில்லை. அவர்கள் காங்கிரஸ் பந்தலில் நின்றுகொண்டு சிங்கம் கர்ச்சித்தது போல் நம் தேச க்ஷேமங்களை அபிவிருத்தி பண்ணவேண்டிய விஷயத்தைப் பற்றியும் அவைகளுக்காக நம்மவர் ஆங்கிலநாடு சென்று விடாமுயற்சி கொண்டு உழைக்கவேண்டியதைப் பற்றியும் நமக்குப்பரம ஆப்தர்களான லிபரல்கட்சியார் உன்னத அதிகாரஸ்தானத்துக்கு வந்திருப்பதால் இச்சமயமே தக்க சமயம் என்பதைப் பற்றியும் நாம் ஓரேகாலத்தில் பல விஷயங்களைக்

கவனித்து உழைப்பதைக் காட்டிலும் சில முக்கிய விஷயங்களை மட்டும் கவனித்து விடாமுயற்சி பண்ணிவந்தால் சீக்கிரம் காரியம் கைகூடும் என்ற விஷயத்தைப் பற்றியும் பக்தி சிரத்தையுடன் உள்ளமுருகப்பேசியதானது எவர் மனத்திலும் பசுமரத்தாணிபோல் பாய்ந்து ஊடுருவியது. லிபரல் கக்ஷியார் அதிகாரஞ் செய்யுங்காலத்திலேயே நாம் நம் சுய அரசாட்சிக்கு வேண்டிய அநுகூல விஷயங்களைத் தேடிக்கொள்வது உசிதமென்றும் வற்புறுத்திக் கூறினர். இவரது வாய்மொழியைக்கேட்டு எல்லோரும் ஆனந்த பரிதராஞர்கள். காங்கிரஸ் சிங்கங்களாகிய நம் சுரேந்திர நாதர், ஜி. சுப்பிரமணிய ஐயர் முதலிய தேசாபிமானிகளும் தங்கள் ஊக்கத்தை வழக்கம்போல் காட்டிப் பேசினர்கள். மார்கழி மாதக்குளிரும் பனியும் சிறிது கஷ்டங்களையே நம் தென்னட்டாருக்கு உண்டு பண்ணினும் தேசாபிமானத்தால் அங்குச் சென்றவர்கள் யாதொன்றையும் இலட்சியம் பண்ணவில்லை. சபையின் நோக்கம் நன்கு நிறைவேறின. எவ்வித சவுகரியங்களும் அயல் ஊராருக்கு அமைக்கப்பட்டிருந்தன. காசி சிறு பட்டணமாகையால் போதுமான இடங்கிடைப்பது அரிதாக இருந்தது. ஆயினும் எவ்வளவு சவுகரியங்களை செய்து கொடுக்கலாமோ அவ்வளவு சவுகரியங்களும் கொடுக்கப் பட்டன. காங்கிரஸை அடுத்து மூன்று முக்கிய மகாசபைகள் கூட்டப்பட்டன. கைத்தொழில பிவிருத்தி மகாசபை நிரம்ப நன்றாய் நடந்தேறியது. பம்பாய், சென்னை முதலிய மகாநகரங்களில் நடந்த விமரிசை இல்லாவிடினும் புது வழக்கம் ஒன்று இவ்வருஷம் அச்சபையில் அநுசரிக்கப்பட்டது. பொருள்களைக் காட்சிக்காக மட்டும் வைத்திராமல் கைத்தொழில் அபிவிருத்தியைப் பற்றிச் சபைக்கு உபந்நியாசங்கள் புரியும் வண்ணம் ஏற்பாடு செய்திருந்தார்கள். அவ்வுபந்நியாசங்களால் தேசத்துக்குப் பெருத்த நன்மைகள் உண்டாகும் என்பதற்குச்சிறிதும் ஐயமில்லை. இச்சபையின் விடாமுயற்சியினலேயே நம் தேசத்தின் வறுமை குறையவேண்டும். பல நற்குறிகள் நமக்கு நாடோறும் காணப்பட்டு வருகின்றன. முயற்சியே திருவினையாக்க வேண்டும். வழக்கம்போல் ஆசார சீர்திருத்த சபையாரும் தங்கள்சபையை நடத்தினர்கள். மகாமண்டலம் என்ற ஒரு பெரியவித்வத் சபை நடந்தது ஹிந்துக்களுக்கெல்லாம் பெருமகிழ்ச்சியை உண்டாக்கிற்று.

நம் வேதசாஸ்திர அபிவிருத்தி விஷயமாய் மகாவித்வான்கள் ஒன்று கூடிப் பேசியது உத்தமமாகவே இருந்தது. இவைகளெல்லாம் நம் காங்கிரெஸ் மகாசபை சென்ற 20 வருஷகாலமாய்ச் செய்துவந்த உழைப்பின் பயனே. சுதேசிய முயற்சியும் இம்மகா சபையினது முயற்சியின் பயனே. இக்கற்பக விருக்ஷத்தின் பயனை நாம் இனித்தான் அநுபவிக்கப் போகிறோம். பலவத்தானகாலம் சமீபத்திலே இருக்கிறது என்பதற்குத் பல நற்குனங்கள் காணப்படுகின்றன. ஜனங்கள் மட்டும் தங்கள் முன் உத்தம ஒழுக்கங்களையும் விடாமுயற்சியையும் சுயநயம் பாராட்டாமையையும் பற்றுக்கோடாகக் கொண்டு "ஆத்ம வத்ஸர் வதானி" என்ற சகோதர வாஞ்சையை மட்டும் அபிவிருத்திபண்ணிக்கொண்டு தங்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்து வருவார்களானல் நாடெங்கும் வாழ்ந்து நன்மைகள் பெருகும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை. சர்வஜனங்களுடைய சுகத்திலும் கண்ணுயிருக்கும்படி யான முக்கிய ஆர்ய தர்மத்தைப் பொன்போற் போற்றி அனுஷ்டானத்திற்குக் கொண்டு வருமோனல் நம் நாட்டுக்கு நிகருண்டோ: நம் சௌக்கியத்துக்குக் குறைவுண்டோ. நம் செல்வத்துக்குத்தான் குறைவுண்டோ. ஆகையால் இம்மகா சபையை என்றென்றைக்கும் உற்சாகத்துடனும் சிரத்தையுடனும் நம் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம்செய்து போற்றுவதே நம் நாட்டாரின் முக்கிய கடமையாம். இக்கற்பக விருக்ஷமே நமக்கு ஜீவவிருக்ஷம் என்று நினைத்து நாம் நம் கடமையைச் சரிவரச் செய்தால் நம் நாட்டிகக்கு க்ஷேமம் உண்டாக யாது தடை. எல்லாம் வல்ல ஈசன் அருள் என்றும் சுரந்து பெருகுவதாக.

பத்திராதிபர்.

திருமாலிருஞ்சோலை.

அல்லது

அழகர்கோவில்.

நூற்றெட்டுத் திருப்பதிகளில் ஒன்றாகிய இத்திவ்விய க்ஷேத்திரம் மதுரையின் வடக்கே 12 மைல் தூரத்திலுள்ளது. காலையில் ஒரு வண்டியேறிச் சென்றால் தரிசனம் செய்து மாலையில் திரும்பிவிடலாம். போகவர வண்டிவாடகை இரண்டு ரூபாமுதல் 3 வரை வண்டிக்குத்தக்கபடி இருக்கும். ஒவ்வொருபக்திமானும் தரிசிக்க வேண்டிய ஸ்தலமே. அழகர் மலை என்று சொல்லப்பட்டஒரு சிறிய மலையின் அடிவாரத்தில் அழகருக்குக் கோவில் கட்டப்பட்டிருக்கிறது. இக்கோவிலைச்சுற்றி பெரிதும் உன்னதமுமான மதில் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. அம்மதிலைச்சுற்றி எங்கும் காடாகவேயிருக்கும்; மதிலுக்குள் ஒருபெரிய பட்டணம் இருந்ததாகக் கூறுகிறார்கள். தற்காலம் ஆங்கு ஒரு வீடுமில்லை, மதிலின் சுற்றளவு ஏறக்குறைய மூன்று நான்குமைல் இருக்கலாம். மதிலின் தென்புறத்தில் ஒரு பெரிய வாசல் இருக்கின்றது. அதன்வழியாகவே வண்டிகளும் ஜனங்களும் போதல் வேண்டும். உள்நுழைந்தவுடன் ஒரே வெளியாய்த் தோற்றுகின்றது. ஊடே சில பாழ் மண்டபங்களும் புராதனக்கட்டடங்களும் காணப்படுகின்றன.

சிறிது தூரஞ்சென்றால் மற்றொரு பெருவாசல் காணப்படும். அதனுள் நுழைந்தே கோவிலுக்குட் செல்லல்வேண்டும். அதுவும் தென்புறமே உள்ளது. அதற்குள்ளும் வண்டிகள் தாராளமாய்ச் செல்லும்; உள் நுழைந்தவுடன் கோபுரங்களும் புஷ்கரணி என்ற தீர்த்தமுங் காணப்படுகின்றன. புஷ்கரணியில் சிலகாலமே தீர்த்தமிருக்குமெனத்தோற்றுகிறது. கிழக்குப்பார்த்தப் பெரிய கோபுரவாயிற் பெருங்கதவுகள் அடைக்கப்பட்டிருக்கின்றன. அங்குப்பதினெட்டாம் படிக் கருப்பன் கோவிலிருக்கின்றதாகக் கூறுகின்றார்கள். கதவுகளுக்குமுன்பக்கத்தல் பெரிய அரிவாள் முதலிய பிடாரிகோவில் ஆயுதங்கள் மூலையில் வைக்கப்பட்டிருக்கின்றன. விவகாரத்தில்

(தொடரும்).

வித்தை XVIII.

[முன் தொடர்ச்சி.]

வித்தையை அபிவிருத்தி பண்ணி வருகிற வித்தியா இலாகாவில் பல சீர்திருத்தங்கள் செய்யவேண்டுவது இன்றியமையாதது. முன் சஞ்சிகையிலேயே சூபர்வைஸர்கள் அதிகப்பட வேண்டுமென்றும் அவர்களுககு 25-கிராமங்களுக்கு மேற்பட்டு இருத்தல் ஒண்ணாது என்றும் கூறினோம். அடுத்த படியில் இருப்பவர் சப் அஸிஸ்டெண்டுகள். இவர்களுக்கும் வேலையதிகமே. இவர்கள் ஆபீஸில் இரண்டு குமாஸ்தாக்கள் கட்டாயமாய் எப்பொழுதும் இருக்க வேண்டுவது இன்றியமையாததாயிருக்க ஒரே குமாஸ்தா மட்டும் ஸ்திரமாகவும் மற்றொருவரை அப்போதைக்கப்போது நியமனம் செய்கிறதும் நிறுத்துகிறதுமாயிருக்கிறார்கள். இவ்வுத்தியோகஸ்தரே வித்தியா இலாகாவில் பொறுப்புள்ளவர்களில் முதல்வராவர். ஆகையால் இது விஷயத்தில் வித்தியா இலாகாதார் அசட்டை செய்து வருதல் தகாது. இது நிற்க. இவ்வாபீஸ் முதல் குமாஸ்தாவுக்கு குறைந்த பக்ஷம் 20 ரூபா சம்பளமாவது இருத்தல் வேண்டும். இவ்வுத்தியோகஸ்தருக்கு அடுத்த பொறுப்பாயுள்ள மேலான உத்தியோகஸ்தர் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர். இவரே வித்தியா இலாகாவின் சகல பொறுப்புக்களையும் வகித்தவர். இவரது ஆபீஸில் அதிக குறைவுகள் ஒன்றுமில்லை. அடுத்த தரத்தில் இருப்பவர் இன்ஸ்பெக்டர். இவ்வுத்தியோகஸ்தருக்குச் சுமார் ஆறு ஜில்லாக்களின் பொறுப்பு உண்டு. இவராலேயே உயர்தர வித்தியாபிவிருத்தி பரவவேண்டுவது. இவ்வுத்தியோகஸ்தர் மட்டும் தக்க சுறுசுறுப்புள்ளவராகவும் புத்திமானாகவுமிருக்கும் பக்ஷத்தில் வித்தையபிவிருத்தி ஆவதில் தடையிராது. இவருக்கு ஆங்காங்குச் சப் அஸிஸ்டெண்டுகள் பரீக்ஷா காலங்களில் உதவி செய்து வருகிறார்கள். இவ்வேற்பாட்டால் சப் அஸிஸ்டெண்டுக்குத் தம் வேலை கெட்டுப்போகின்றது. மேலும் சப் அஸிஸ்டெண்டுகள் அநேகருக்குப் போதுமான சுயபாஷாஞானமிருக்கிறதில்லை. ஹைஸ்கூல் வேலைகளில் அவ்வளவு பழக்கமுமிருக்கிறதில்லை. ஆகையால் ஒவ்வொரு இன்ஸ்பெ

க்டருக்கும் ஹைஸ்கூலில் பழகிய வரும் கூடியவரை சுயபாஷாஞான முள்ளவருமான ஒரு உயர்தர சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரை உதவிக்குக்கொடுத்தாலொழிய வேலை சரிவர நடக்கமாட்டாது. தற்காலம் ஹைஸ்கூல் விஷயத்தில் நடந்துவரும் இன்ஸ்பெக்டர் பரீக்ஷை அதிகபயனுள்ளதாகக் காணப்படவில்லை.

இது நிற்க. இன்ஸ்பெக்டர் ஆபீஸில் தலைமை உத்தியோகஸ்தராயிருப்பவர் ஐம்பது அறுபது சம்பளத்திலிருந்து கொண்டு 75 முதல் 500 வரை சம்பளம் வாங்குகிறவர்களை அதிகாரம் செய்கிறார்கள். அச்சொற்ப சம்பளக்காரர்க்கு இத்துணை பொறுப்புக் கொடுப்பதானது யுக்தமாகத் தோற்றவில்லை. ஆகையால் நாம் மேல் சுட்டிக்காட்டிய வண்ணம் ஓர் உயர்தர சப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டரை அவருக்கு உதவியாகக்கொடுத்துப் பரீக்ஷா காலத்தில் உதவி செய்யச் சொல்வதுமன்றி ஆபீஸ் வேலையில் பொறுப்பானவைகளை பார்க்கச் செய்யவும் வேண்டும். அப்பொழுதுதான் பள்ளிக்கூடங்களின் நிலைமை விருத்தியடைய இடமுண்டு. வித்தியா இலாகாதாருக்கும் கௌரவமுண்டு. கவரன்மெண்டார் மற்றைய இலாகாக்களில் முக்கியமாய் மராமத்து இலாகாவில் எத்துணையோ பெரியசம்பளக்காரரை இப்படிப்பட்ட முக்கியமான ஆபீசுக்குத் தலைவராக நியமனஞ் செய்திருக்க வித்தியா இலாகா விஷயத்தில் மட்டும்குறைவான சம்பளத்தவர்களை நியமனஞ் செய்வானேன். மற்றோர் விஷயமும் கவனிக்கத்தக்கது. மராமத்து இலாகாவில் தனிமையாகவே கணக்குப் பார்க்கச் சில கணித நிபுணர்களை நியமனஞ் செய்கிறார்கள். முனிசிபல் லோகல்பண்டு முதலிய கணக்குக்களை கணக்கு விஷயத்தில் நன்கு பயின்றவர்களைப் பரிசோதிக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவ்வாறு ஏன் எல்லாக் காலேஜ் ஹைஸ்கூல் முதலிய கணக்குக்களைத் தனித்தணிக்கை செய்ய ஒரு கணக்கு நிபுணரை நியமனஞ்செய்யலாகாது? இவ்வாறு செய்யாததால் பல முறை சில இடங்களில் மோசம் நடக்கின்றது. இன்ஸ்பெக்டருக்கோ இவைகளைப் பரிசோதனை பண்ணக் காலங் கிடையாது. இஃது அவருடைய வேலையுமன்று. கணக்குப் பரிசோதகர் தனிமையாகவே நியமனம் செய்யப்படவேண்டும். அவர் எல்லாக் காலேஜ் ஹைஸ்கூல்களின் கணக்கைப் பரிசோதிப்பதுடன் சப் அஸிஸ்டெ

ணடு இன்ஸ்பெக்டர், அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் முதலியவர்களுடைய ஆபீசுகளையும் பரிசோதனை செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் கணக்கு ஒழுங்காக இருக்கமுடியும். இது நிற்க. வித்தியா இலாகாத் தலைவருக்கு உதவியாயிருப்பவர் சிற்சில சமயங்களில் காலேஜ்களையும் பெரிய ஹைஸ்கூல்களையும் மேற்பார்வை பார்த்தல் நலம். தற்காலம் சர்வகலாசாலைச் சங்கத்தார் இப்பொறுப்பை வகித்திருப்பதால் இஃது அத்தனை முக்கியமாகமாட்டாது.

வித்தியா இலாகாதார் கவனிக்கவேண்டிய வேறோர் முக்கியமான விஷயம் யாதெனில் வித்தியாபிவிர்த்தி விஷயத்தில் கண்ணுங் கருத்துமாயிருந்து உழைத்து வருகிறவர்களுடைய யோசனையைக் கேட்பதற்கு அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர்கள் சபைகூட்டுவதேயாம். வருஷம் ஒருமுறை யாவது முக்கிய உபாத்தியாயர்களை ஜில்லாவின் பலபாகங்களினின்றும் ஒருங்குகூட்டி அவரவர்க்குத் தெரிந்த யோசனைகளைக்கேட்டு ஜில்லாவின் கல்வியபிவிருத்தியைத் தேடல் யுக்தமாகும். அவ்யோசனையை யவர்கள் வித்தியா இலாகாவின் தலைவருக்கு அப்போதைக்கப்போது தெரியப்படுத்தலாம். இன்ஸ்பெக்டர் தாங்கள் பரீஷைக்கு வரும்காலத்தில் வித்தியாபிவிருத்தி விஷயமாய் தக்கபுத்திமான்களையும் உபாத்தியாயர்களையும் சபைகூட்டி அவர்களுடன் யோசனைசெய்தல் வேண்டும். அக்காலங்களில் தீர்மானமான விஷயங்களை வித்தியா இலாகாத்தலைவருக்குத் தெரியப்படுத்தல் வேண்டும். இவ்விதம் செய்யும் பக்ஷத்தில் அப்போதைக்கப்போது வித்தியாவிஷயமாய் ஜனங்களுக்கும் ஊக்கம் பிறக்கும். வித்தியா இலாகாதார்க்கும் ஜனாபிப்பிராயம் தெரியவரும். ஒருவர் உதவியின்றி மற்றொருவர் யாதொன்றும் செய்யமுடியாது. ஒவ்வொரு ஜில்லாவிலும் வித்தியா ஊக்கமுள்ளவர்களைச் சபையாகச்சேர்த்து அவர்களுடன் வித்தியா இலாகாதார் யோசனைசெய்து ஜில்லாவின் வித்தியாபிவிருத்தியைத் தேடல் வேண்டும். பழைய முறைகளை முற்றிலும் ஒழித்துவிடாமல் தழுவக்கூடிய நல்லவிஷயங்களைத் தழுவிப்புதுமாதிரிகளிலும் ஜனங்களுக்குப் பொருத்தமான விஷயங்களைமட்டும் அனுசரித்து நடத்தினால் ஜனங்களுக்கு அனுகூலமாக இருக்கும். எண்ணல், எழுதல், வாசித்தலுடன் சுகம்பேணு முறையும் கிருஷிமுறையும் ஜனங்களுக்கு இன்றியமையாதன. மற்

றைக்கல்விகள் இடம் பொருள் ஏவலுக்குத் தக்கவண்ணம் செய்ய லாம். ஜனங்கள் வித்தியா விஷயத்தில் அசட்டை செய்வார்களானல் நாட்டின் க்ஷேமத்துக்குக் குறைவுநேரிடும். அறிவாலேயே நாட்டின் அந்தகாரம் நீங்கல் வேண்டும். அறிவே நமக்கு க்ஷேமத்தைத்தரும். அறிவே நமக்குச் செல்வாக்கை உண்டாக்கும். அறிவே நமக்குத் தனம் .அறிவே நமக்குக் கனம். அறிவே நமக்குப் பலம். அறிவே நமக்கு ஆயுதம். அறிவே நமக்குச்சுகம். அறிவின் ஆனந்தமேஆனந்தம். மற்றவை யெதுவும் இதற்குச் சமமாகாது. அறிவில்லாவிடில் எல்லாரும் அந்தகனுக்குச் சமானமானவரே. ஆகையால் அறிவை எப்பாடுபட்டாயினும் அடையவேண்டும். "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சைபுகினும் கற்கை நன்றே" அடைந்த அயலாருக்கு அனுதாபத்துடனும் அன்புடனும் புகட்டல் வேண்டும். அறிவைப் பரவச் செய்தல் போல் வேறு புண்ணியமும் உண்டோ? ஆகையால் "வித்தைவிரும்பு" என்ற மூதாட்டியின் மொழியை ஏற்றிப்போற்றி அறிவை அபிவிருத்தி பண்ணுவோமாக, அறிவே அன்புக்கும் அருளுக்கும் மூலகாரணம்.

"அறிவுடையார் எல்லாமுடையர் அறிவிலார்
என்னுடைய ரேனுமிலர்"

பத்திராதிபர்.

உ

அன்னையும் பிதாவும்.

ஔவைப்பிராட்டி யாரருளிய அருமை நீதி நூல்களுள் கொன்றை வேந்தன் என்பதுமொன்று. இதன் காப்புச்செய்யுளாகிய "கொன்றை வேய்ந்த செல்வன் அடியிணை என்றும் ஏத்தித்தொழுவாம் யாமே" என்பதன் காரணமாக இந்நூல் "கொன்றை வேய்ந்தான்" எனப்பெயர் பெற்றது. இக்காலத்துக் கொன்றை வேந்தன் என மருவி வழங்கப்பெறுகின்றது. ஆத்திசூடி என்பதும் இவ்வாறே பெயர் பெற்றது. இஃது இவ்வாறாகப் பிற்கால வைணவப்

புலவரொருவர் மதிப்பேயாற் பீடிக்கப்பட்டவராகி இம்முதற்காப்புச் செய்யுளை எடுத்துவிட்டுக் "கன்று மேய்த்த கண்ணனடியிணை என்று மேத்தித்தொழுவோம் யாமே" எனப்புதிதாகச் சேர்த்து வெளியிட்டனர். அது கண்ட சைவரொருவர் அவரை நோக்கி நீர் சிவபரமான துதியை விஷ்ணுபரமாக மாற்றினீராயினும் நூலின்பெயர் கொன்றை வேய்ந்தான் என்றுதானே யிருக்கின்றது. நீர்மாற்றிய வாறு இருப்பின் இந்நூற்பெயர் கன்று மேய்த்தான் என்றில்லவா இருத்தல் வேண்டும்; எனக்கேட்கத் தலைவணங்கி நாணினர் எனக்கூறுவர். இந்நூலிலுள்ள ஒவ்வொரு நீதிவாக்கியங்களையும் எடுத்துப் பொருள் விளக்க வேண்டுமென்று சில நண்பர் விரும்பினமையால் முறையே இப்பாநுவில் வெளியிடத் தொடங்குகின்றோம்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற மூதாட்டியின் திவ்ய வசனத்தை நாம் அதி பாலியத்திலேயே கற்றுள்ளோம். பாலப்பருவமே கல்வி கற்றற்கு ஏற்றகாலம். ஆயின் அப்பருவத்தே நாம் கற்பவற்றின் பொருள் வளப்பத்தை நன்குசிந்திப்பதில்லை. சிந்திக்கத்தக்க அறிவுத்திட்பமும் பற்றாது. ஆகவே அப்பருவத்தில் நாம் கற்பவற்றுட் பெரும்பாலன உரிய பலன்றருவதில்லை. அப்படித் தராமை நம் ஆராய்ச்சிக்குறையேயல்லது வேறென்ன? நாம் சிறுபருவத்தே கிளிப்பிள்ளைபோலத் தொனியளவாகவே கற்றுக்கொள்ளும் ஒவ்வொரு சிறுவாக்கியங்களும் ஒவ்வொரு அரிய மாணிக்கமேயென்று கூறினும் அவற்றின் பெருமைக்குப்ப[illegible]சாம். தெய்வத்தன்மைவாய்ந்த ஒளவைப்பிராட்டி யருளிய பாலநீதிகளே இகபரசாதனங்களாகும். இது பற்றியன்றே இந்நீதிநூல்கள் பலவும் பல்லாயிரங்காவதங்கட்கப்பால்வழங்கும்பலவேறுபாஷைகளிலும் எடுத்துப்பாராட்டத்தக்கவாயின. இவற்றைப்புறநாட்டார் எத்துணை மேம்பாடாகக் கருதுகின்றாரோ அத்துணையாக நாம்போற்றுகின்றிலம். சாதாரணமாக தூரத்துள்ளவற்றைச் சிறப்பித்தலும், சமீபத்துள்ளவற்றைப் புறக்கணித்தலும் மனிதரியல்பு. "புறக்கடைப்பச்சிலை மருந்துக்குதவாது" என்பது அறிந்ததன்றே, இக்கிழவியின் திருவாக்கைமட்டில் சற்று ஊன்றிப்பார்த்து உட்கொள்ளுவோமாயின் எய்தற்கரிய தொன்றுண்டோ?

அன்னையும் பிதாவும்—தாயும் தந்தையும், முன் அறி தெய்வம் —முதலில் அறிந்துகொண்ட கடவுளர்வர் எனச்செம்பொருள் தோன்றுவதாயினும் விசேடம் பலவுள. தந்தையைப் பார்க்கினும் தாயே சிறந்தவள் என்பது தோன்ற "அன்னையும் எனமுதலிற் கூறினர். குழந்தைகள் பத்துமாசகாலம் கருப்பையிலிருந்து பிறந்தது முதல் பாலருந்தி வளர்க்கப்படுதலின் பிறர் காட்ட வேண்டாது தாமாகவே தமது தாயையறியும். பின்னர் தாயானவள் இவன் கின் தந்தையென்று காட்டவே பிதாவைஉணரும். பின்பு பிதாவால் குருவையும், குருவினால் கடவுளையும் அறியலாகும். இம்முறைபற்றியேதான் "மாதா பிதா குரு தெய்வம்" என வழங்குவது மென்க. எல்லா ஜீவன்களும் தம்மையும் தமக்காதாரமாகிய கடவுளையும் உள்ளவாறுணர்ந்த பொழுதே பிறப்பற்று வீடு பேறடைதல் கூடும். கடவுளைக் குருவினாலும், குருவைப் பிதாவாலும், பிதாவை மாதாவாலும், மாதாவை சுயமாகவும் அறிந்து கொள்ளுதலின் மேற்கூறிய நால்வரும் கடவுளரேயாவர், அங்ஙனம் அறிதலுள்ளும் தாயும் தந்தையுமே முதலில் அறிப்பப்படுகின்ற கடவுளென்றார். இயல்பாக எல்லாராலும் பிரயாசையின்றி அறிந்துகொள்ளப்படுதலால் என்க. குருவும் தெய்வமும் பின்னறி தெய்வங்களாம். இங்ஙனம் மாதாவும் பிதாவும் முன்னறிதெய்வம், குருவுந்தெய்வமும் பின்னறி தெய்வமென்று கொள்ளுதலில் ஒரு சூக்ஷ்மமுமுண்டு. மாதாவும் பிதாவும் ஒருபிரிவும், குருவும் தெய்வமுமொரு பிரிவுமாகக் கொள்ளலாம். மாதாவானவள் உடலை வளர்த்துப் பிதாவைக் காட்டுவள், குருவோ ஞானத்தை வளர்த்துக் கடவுளை யுணர்த்துவர். மாதா உடல் வளர்தற்கு வேண்டும் பால் முதலிய ஆகார முதவுவள். குரு ஞானம் வளர்தற்கு வேண்டும் சாஸ்திரோபதேச முதலிய புரிவர். இவற்றால் மாதா பிதாக்களை முன்னறி தெய்வமென்றல் எவ்வளவு சிறந்த பொருளை யடக்கி நிற்கின்றது.

தாய், தந்தையினும் சிறந்தவளென்று மேலேகூறினோம். புதல்வரைப் பெற்று வளர்த்து வருதலினும் குழந்தைகளிடத்து அன்பு பாராட்டும் வகையினும் நமது தாயைப்போல்வார் பிறர் உண்டோ. தாயானவள் தன்னுடைய சரீர வருத்தத்தையும் மனவருத்தத்தையும் பிறசௌகரியங்களையும் கருதாது மக்களை வளர்த்தற்குப் படும்

சிரமத்தையும் அவளது எலும்புங்கரைந்து பெருகக் கொண்டுள்ள உள்ளன்பையும் எவ்வாறு அளவிடுவது? இதைப்பற்றி முற்றுங்கூற யாராலாகும்? இது பற்றியன்றே இல்லறம் விடுத்துத் துறவறம் பூண்டு தந்தையும் வணங்கப்பெறுகின்ற மகான்களும்தாயைக்கண்டால் வணங்குகின்றார்கள். இதனை

"தந்தைதாய் பணித்தல் செய்யுந்தவமலால் தவம்வேறில்லை
மைந்தருக்கு. எதிகளேனும் வணங்குவர் தாயை. த் தந்தை
அந்தமைந்தனையே போற்ற வேண்டும். மற்றுதல் தன்னால்
சிந்தையுற்றுணரில் ராயேதந்தையில் சிறந்தாள் மன்னோ."

என்னுங் கவியால் அறியலாம். இக்கவியில் "தந்தைதாய் பணித்தல்செய்யுந்தவமலால் தவம் வேறில்லை மைந்தருக்கு." என்பது எவ்வளவு அருமையைக் காட்டுகின்றது? மக்கட்கு தவமென்பது மாதாபிதாக்கள் கட்டளைப்படி நடத்தலேயாம். பிறிது தவம் இல்லை. இது எத்துணை வற்புறுத்தி யுரைத்தவாறுகின்றது. ஒவ்வொருவரும் இவற்றை நன்கு கடைப்பிடித்துத் தத்தம் தாய் தந்தையருக்கு அடங்கிப் பயபக்தியுடன் அருமை பாராட்டிப்போற்றி வருவது இன்றியமையாததே. ஒருவன் தனது தாய் தந்தையரை அவமதித்து நடத்துவானாயின் அவன் மகனும் அவனை அவமதித்து நடத்துவானன்றோ? நமது நாட்டில் தற்காலம் புதிய நாகரீகப்பயிற்சியைக் கைக்கொண்டவர் போல நினைத்து இறுமாப்புற்றுக் களிக்கும் பல்லோர் தமது தாய் தந்தையரை அடிமைகளைப்போல அவமதித்து நடத்துகின்றனர். அந்தோ இஃதென்ன பாவம்! இவர்களுடையும் கதிதான் யாது? இன்னார்கட்கு ஒரு சிறிய கதை புகல்கின்றாம்.

ஒருவன் மனைவிசொற்கேட்டு மயங்கிய மனத்தனாகி வயதுமுதிர்ந்த பிதாவைச்சிறிதும் மதியாது அப்பிதாவின் முதுமைப் பருவத்தோற்றத்தைக்கண்டு அருவருத்து தன்னுடன்வைத்துப் போஜனம் செய்யவும் சகியாமல் ஒரு ஓடு கொடுத்து அவ்வோட்டிலேவார்க்கும் கஞ்சியைப் புறத்தேவைத்துக் குடித்து ஒதுங்கியிருக்கச்செய்தான். கைப்பொருளனைத்தும் புத்திரனுக்களித்துக் கைகால் வலிமை குன்றிக் கண்ணொளி குறைந்து காதறி விழுந்து வாயொலி மழுங்கித்

தள்ளாடி யிருக்கும் கிழவன் யாது செய்வன்? அந்தோ! பரிதாபம்!! கொடிய புத்திரனது கொடுஞ் சொற்களைக் கேட்டுக்கொண்டு வெட்கத்தையும் விடுத்து வயிற்றுக்கஞ்சியையே எதிர் பார்த்துக் கொண்டிருந்தான். இங்ஙனமிருக்கையில், இக்கொடிய புத்திரனுடைய புத்திரனொருவன் இவ்வநீதியைக் கண்டு சகியாதவனாகி மனம் புழுங்கி எப்படியாவது தன் பாட்டனுக்குக் கஷ்ட நிவிர்த்தி செய்ய வேண்டுமெனவும், தந்தைக்குப் புத்தி கற்பிக்கவேண்டுமெனவும் நினைத்தான். ஒரு நாள் பாட்டன் உண்கலமாகிய மண் கலத்தை யெடுத்து ஒளித்து வைத்துவிட்டான். போஜன காலத்தில் கிழவன் ஓட்டைத் தேடினான். வைத்தவிடத்தில் காணாது வருந்தினான். மகனும் மருகியும் யாது கூறுவார்களோ யாது செய்வார்களோ என்று பயந்தான். இதற்குள் மகன் வந்து ஏ கிழவா! ஓட்டை யெடுத்து வந்து கஞ்சி வாங்கிக் கொள்ளக்கூடத் திரவில்லையா? சீக்கிரம் வந்தாலொழியக் கஞ்சி கிடையாது என்று கூறினான். இடியேறுண்ட நாகம் போல் நடுங்கிய கிழவன் வந்து அப்பா! ஓடு களவு போய்விட்டது. தேடித் தேடிப்பார்த்தேன் அகப்படவில்லை என்று நயந்து மொழிந்தான். மகனுக்குக் கடுங் கோபம் பிறந்தது. கிழட்டுச் சனியனுக்குத்தினமொரு ஓட்டுக்கு யார் அழுகிறது. பத்திரமாக வைத்துக்கொள்ளக் கேடென்ன வென்று வெடுவெடுத்துக்கூறி யடிக்கச் சென்றான். அவ்வேளையில் அவன் மகன் ஓடிவந்து தந்தையைநோக்கி அப்பா என் பாட்டனை யடியாதே அவ்வோட்டை நான் எடுத்து வைத்திருக்கிறேன் என்றான். உடனே அடே நீ எதற்காக அதை யெடுத்தா யென்று கேட்க அப்பா சமீபத்தில் நீயும் கிழவனாகி விடுவாய் அப்போது உனக்குஒருஓடு நான்தானே தேடிக்கொடுக்கவேண்டும், ஆதலின் இப்போதே எடுத்து வைத்திருக்கிறேன். என்று கூறினான். இது கேட்டவுடன் அடே பயலே எனக்கும் ஓடு கொடுக்கப் போகிறாயா என்று அதட்டினான். சிறுவன் அஞ்சாது ஏனப்பா கோபித்துக்கொள்கிறாய் நீ உன் பிதாவை எவ்வாறு பரிபாலிக்கிறாயோ அவ்வாறு தானே உன் பிள்ளையாகிய நான் உன்னைப் பரிபாலிப்பேன். இதில் நீ வருந்தவும் கோபிக்கவும் நியாயமில்லையே என்று எதிர்த்து அஞ்சாது கூறினான். உடனே துஷ்டனுக்கு நற்புத்தி வந்தது. பிதாவை வணங்கி அதுவரை செய்த பிழை பொறுக்க

(தொடரும்) முருகவேள்.

சிந்தாமணி சரித்திரம்.

3-வது அத்தியாயம்.

இவ்வுலகின் கண் உதவியற்றவர்க்கே எல்லாத்துன்பங்களும் நேருமென்பதோ எல்லாம் வல்ல கடவுளின் விதி. குற்றாலமிருந்து புறப்பட்டுப் போன சிந்தாமணி வழியெலாங் கடந்து கடைசியாக கொல்லம் என்று பெயருள்ள ஊர்போய்ச் சேர்ந்தாள். அங்கு போனவுடன் சுந்தரம்மாள் அப்பெரியவர் சகோதரனாகிய கிருஷ்ணய்யருடைய வீட்டில் சிந்தாமணியைக் கொண்டுபோய் ஒப்புவித்துவிட்டுத் தன்னைச் சேர்ந்தோருடைய கிருகத்துக்குப் போய் விட்டாள். கிருஷ்ணய்யர் சிந்தாமணியின் வரலாறுகளைக் கேட்டு மிக்க மனவருத்தமடைந்து அவளை நோக்கி

அம்மா நீ புகன்ற வரலாறு கேட்போர் மனம் கல்லாயிருந்தாலும் அதையும் உருக்கிவிடுமே. என்ன கொடுமை? கணவன் ஒருவாறு மதிமயங்கி அலங்கோலமாய் நின்றாலும் அந்தச் சமயத்தில் தாயாதிக்காரர்கள் செய்திருக்கும் அக்கிரமம் எத்தன்மையுடையது. பொருளாசையானது உடன் பிறந்தாராயினும் உற்றாரெனப் பெயர்கொண்டு சூழ்ந்திருக்கினும் செய்யவொண்ணாத கொடுமைகளெல்லாம் செய்யும்படி அவர்களை ஏவுகின்றது. அது இம்மானிடப் பிறவிக்கு இயற்கையான குற்றம்போலும். நாம் மேலாகக் கொண்டாடும் பாரதம் என்பது என்ன? இராமாயணம் என்பது என்ன? எல்லாம் தாயாதியின் கொடுமையால் விளைந்த கதைகள் தாமே. அந்நூல்களின் கதாநாயகர்களைக் காட்டிலும் நாமென்ன உயர்ந்தவர்களா? பரமபாகவதனென்று வெளிக்கோலங்கொண்ட பரதனும் உண்மையில் தாயாதிக் கொடுமையையே செய்தானேவென்று நான் சந்தேகிக்கிறேன் எப்படியெனில்

அடவிசெல்லென விரமற் கறைந்த கேகயன் மடந்தை
கடியகல் வெயின் மண் புல்லர்ற்கான் மிகவருந்திடாத
படி முனமிரங்கி யீந்த பாதுகைதனைப் பறித்தான்
கொடுமனப் பரதன் ஞாதிக் குலத்தவர் சதியிவ்வாறே.

இது மட்டுமா,வாலியும் சுக்கிரீவனும் தாயாதிக்காரர்களல்லவா? சமயம் பார்த்திருந்து இராவணனைப் பகைத்து அவன் எதிரியாகிய இராகவனுடைய பங்கில் சேர்ந்த விபீஷணன் தாயாதிக்காரனல்லவா. அது இருக்கட்டும். திருவனந்தபுரமிருந்து என் நண்பன் மகாதேவன் நேற்று இவ்விடம் வந்திருக்கிறான். அவன் அவ்விடத்திய வரலாறுகளையெல்லாம் செவ்வையாய் அறி

ந்தவன். உன் கணவனிருக்கும் இடமும் அவர் நிலைமையும் அவனுக்கு நன்ருய்த் தெரிந்திருக்கலாம். அவனை இப்பொழுதே பார்த்து எல்லாச் சங்கதிகளையும் அவனிடமிருந்து தெரிந்துகொண்டு வருகின்றேன். அவசியமானுல் நானும் அவனும் உன்னுடன்கூடவே திருவநந்தபுரத்துக்கு வந்து உனக்குவேண்டிய உதவிகளைச் செய்கின்ருேம். அம்மா நீகொஞ்சமேனும் பயப்படவேண்டாம். என் கிருகத்தை உன் பிறந்த வீடெனப் பாவித்து மனக்கவலையின்றி இருப்பாயாக என்று மனமிரங்கிச் சொன்னுன். இது கேட்ட சிந்தாமணி

ஐய, வேறு நான் என்ன செய்யத்தக்கது. தாங்களே அடைக்கலமென்று தங்களிடம் வந்துவிட்டேன். தாங்கள் செய்யும் எவ்வித உபகாரத்தையும் சிரசால் பெற்றுக்கொள்ளுகிறேன் என்று மறுமொழி சொல்லிவிட்டு அந்த வீட்டிலேயே அன்று முழுவதும் இருந்தாள். தான் சொல்லியபடி சங்கதிகளை விசாரிப்பதற்காக அன்றிரவில் கிருஷ்ணய்யர் மஹாதேவய்யருடைய விடுதிக்குப்போய் அவரைக்கண்டு பேசி மறுநாட்காலையில் அவரையும் அழைத்துக்கொண்டு தன் வீட்டுக்கு வந்தார். சிந்தாமணி காலையில் எழுந்திருந்து ஸ்நானம் செய்துவிட்டு நெற்றியை விபூதியால் அலங்கரித்துக்கொண்டு கடவுளைத் தியானித்து ஒப்பற்ற பரம்பொருளே உன்னருளாலன்ருே இவ்வுலகத்தில் எல்லாவுயிர்களும் உய்கின்றன. மானிடர்கள் முன் புரிந்த எப்பாதகமும் உன் கருணை முன்னர் வெந்து சாம்பலாகிவிடுமல்லவா. கிருபாநிதியே என்னுடைய முன்வினை எப்படியிருப்பினும் அதை உன் கடாட்சத்தினுல் முற்றிலுமகற்றி என்னைச் சோகக்கடலினின்று கரைசேரும்படி செய்தருளவேண்டும். அந்தப்புண்ணியவான் நேற்று இரவில் வெளியில் போனவர் இன்னும் வரவில்லை. இவ்விடத்திலேயே என் கணவன் வரலாறுகளெல்லாம் சுருபமாக அவருக்கு வெளியாகப்போகின்றன்வா என்று கண்களைமூடிக்கொண்டு தியானத்துடன் பரமேசுவரனிடம் முறையிட்டுக்கொண்டிருக்கையில் அந்தச்சமயத்தில் கிருஷ்ணய்யர் அவர் மனைவியுடன் வந்து

அம்ம, என் சிநேகிதனைக் கூட்டிவந்திருக்கிறேன். நான் நேற்று இரவெல்லாம் அவருடன் உன் கணவன் சங்கதியைப் பேசிக்கொண்டிருந்தேன். அவருக்கு எல்லா விபரமும் தெரிந்திருக்கிறது என்று சொல்லிவிட்டு என் மஹாதேவா, இங்கேவரலாமே, என்று வாயிற்படியில் நின்றுகொண்டிருந்த அவர் நண்பனைக் கூப்பிட்டார். உடனே மஹாதேவய்யர் அவ்விடம்வந்து.

ஆ! இந்தப்பெண்தானு; கிருஷ்ண, என்ன கஷ்டம் பார்த்தாயா இலட்சுமியைப்போன்ற இவளை விட்டுவிட்டு ஒரு தரித்திரம் பிடித்த சனியன் கையில் அவர் அகப்பட்டுக்கொண்டிருக்கிருர். சீ, சீ, என்ன மனுஷன்.

அவளோ மகா பொல்லாதவளாயிற்றே. அவளைவிட்டுப் பிரித்து இவரை நல்ல முறைக்கிக் கொண்டுவருவது மிகவும் அசாத்தியமான காரியம். ஈசுவரசங்கற்பமெப்படியோ. என்று சொன்னான்

இது கேட்டு கிருஷ்ணய்யர் மனைவி

சிவ, சிவ, அப்படியொரு மகராஜி யிருக்கிறுளா—அந்தப்பிசாசு இவரையாபிடிக்கவேண்டும். ஐயோ, இந்தப்பெண்ணுடைய குணத்துக்கும், ஆசார சீலத்துக்கும் சோதனைபோல இந்தக்கஷ்டம் எப்படி நேர்ந்தது. அவளென்ன இந்தப்பெண்ணைக்காட்டிலும் அதிக அழகுள்ளவளா. அப்படிப் புத்தி கெட்டுப்போகும்படியாகத் தேகத்தில் என்ன கொழுப்போ தெரியவில்லை, என்று சொல்லி இந்தப் பெண்ணைப் பார்த்துப் பரிதாபப் பட்டாள். அதற்கு மஹாதேவய்யர்

மன்னி உனக்கொன்றும் தெரியாது. இந்த தேசமெல்லாம் அந்தக் குரங்குகள் தானே நிறம்பியிருக்கின்றன. குஞ்ஞுக்குட்டி என்று பிர்மராக்ஷஸ் ஒருத்தி யிருக்கிறுள். சேலம் முதலியார் குடும்பத்தையும் அதினுடைய செல்வத்தையும் பாழாக்கினவள் அந்தத் தாடகைதான் எமன், தூதன், காலன் போல அவளுக்கு மூன்று பெண்கள் இருக்கிறுர்கள். மூத்தவள் ஞாஞா. அவளுக்கிளையவள் குந்ிரக்குஞ்ஞு. கடைசிக்குட்டி அம்மு. எல்லாம் விஷங்கள். இந்தப்பெண்ணுடைய புருஷன் அந்த நடுவினவளுடைய வலைக்குள் வீழ்ந்திருக்கிறுர். அவர்களுடைய குணங்கள் மிகவும் அற்புதமானவைகள் பில்லி: சூன்யம் அவர்கள் சுயாதீனமே. ஒருசமயத்தில் என் சிநேகிதர் ஒருவரிடத்தில் அடியில்கண்டபடி குந்ிரக்குஞ்ஞுபாடினளாம். அதாவது:—

சாவேயுறுதியென் தம்மலுக்கென் தங்கைதான் சிரிக்கில்
நோவாயமையும் என்னக்காள் மகிழ்ந்துகண்ணேக்கிவிடில்
போவார் திரும்புவதில்லை என்தாயொரு காலிசைக்கத்
தீவாதைகண்டெங்கள் ஊரனைத்தும் வெந்துதீந்ததுவே.

என்று பாடினுள். என்ன மனேகரமான குணங்கள் எல்லாந்தெரிந்திருந்தும் தானே விளக்கின்மீது விழும் அந்துப்பூச்சிகள்போலப் பலவிடங்களிலிருந்து அனேகர்கள்வந்து பொருள் மானம் ஆரோக்கியம் இவைகளை இழந்து பாழாகிப்போகின்றுர்கள். மலைவளங்களையும் விருக்ஷ ஜாதிகளின் அழகையும் பார்க்கவென்று சிலபிரபுக்கள் வருகிறுர்கள். வெகு பக்திமான்கள் போலப் பத்மசுவாமியைத் தரிசனம்செய்யவென்று சிலர் வருகிறுர்கள். நல்லகாற்றுக்கும் ஔஷதம் சாப்பிடுவதற்கும் இந்த இடந்தான் மேலான

தென்று இவ்விடத்தில் வந்திருக்கிறார்கள். இரண்டுமாதம் கோர்ட்டுகள் மூடினால் மிகவும் அவசியமானகாரியத்தைச் சாதிக்கவருகிறவர்கள்போல எத்தனைபெயர்கள் தஞ்சாவூரிலிருந்தும் மதுரையிலிருந்தும் இவ்விடம்வந்து யாத்திரையை நிறைவேற்றிவிட்டுப் போகிறார்கள். எல்லாம் திருட்டுத் தனந்தான். இந்த ஆபாஸங்களில்விழுந்து ஜன்மத்தைக்கெடுத்துக்கொள்ள வருவதைத்தவிர வாஸ்தவத்தில் வேறு அவர்களுக்கு இங்கென்னகாரியம் "நெல் குறுணி எலிமுக்குறுணி" என்பதுபோல இந்தத்தேசத்தில் எங்கேபோனாலும் பெரும்பாகம் இந்தப்பிர்மஹத்திகளே தவிர வேறுஎன்ன புனிதமான வஸ்துக்களிருக்கின்றன. என்னமோ சனியன் அது இந்நாட்டு வழக்கம். அதைப்பற்றி நமக்கென்ன. நடராஜசெட்டியார் மிகவும் புத்திசாலி, கர்ப்பஸ்ரீமந்தர், சாமான்யலௌகிகவிவகாரத்திலும் வியாபாரமுறையிலும் மிக்க கூர்மையான அறிவையுடையவர். அவர் இவ்விதமாக மாட்டிக்கொண்டதுதான் ஆச்சரியம். அவர் இவ்விடம்வந்து இரண்டுலட்சம் ரூபாய்வரையில் அழித்துவிட்டாரே. இந்தக்கழுதைகளுடன் வைக்கத்துக்கும், ஆல்வாய்க்கும், அம்பலப்புழைக்கும், ஆலப்புழைக்கும், கன்னியாகுமரிக்கும் வருஷத்தில் நாலுதடவை உத்ஸாகத்துடன் யாத்திரை போய் வருவதும் கோலாசலமாகச் செலவுசெய்வதுமாயிருந்தால் எவ்வளவு திரவியந்தான் தொலையாது அதைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பதில் பிரயோசனமில்லை. இந்தப்பெண்ணுடைய புருஷன் இப்போது திருவனந்தபுரத்திலிருக்கிறார். அவ்விடத்துச்குப்போய் அங்கே சிலநாளிருந்து அவர் விளைத்துக்கொண்டிருக்கும் நிர்ப்பந்தங்களையெல்லாம் செவ்வையாய் யோசித்துத் தகுந்தபடி முயற்சிசெய்யவேண்டும். அவரோ திரவியவான், பிரபு. மனங்கொண்டது மாளிகை யென்பதுபோல் ஒருவிதமாக ஒருஇடத்தில் மனம் அழுந்திவிட்டபிறகு அதைப் பக்குவம்பார்த்துத் திருப்பமுயன்றால் தான் ஒருவாறு பயன்படும். இல்லாவிடில் இன்னும் அதிகமான விபரீதமாக முடியுமேதவிர வேறு பிரயோஜனம் உண்டாகாது என்று சொல்லிவிட்டுப் பிறகு சிந்தாமணியைநோக்கி

அம்மா, அடித்த பந்து திரும்பவும் மேலாக கிளம்புமேயல்லாது கீழ்ப்படிகிற சுபாவம் அதற்கில்லை. ஒருமனுஷனுடைய புத்தி விரசமாக்குமார்க்கத்தில் பிரவேசித்தால் அதைச் சம்பிரதாயமாகவும் நாளுக்குநாள் அதற்கு இதமான உபாயங்களை அனுசரித்தும் அதைச் சீர்ப்படுத்த வேண்டியது தான் யுக்தமான முறை. சில அறிவு கெட்ட மங்கையர்கள் தான் தம் கணவர்கள் கொஞ்சம் முறைபிசகி நடக்கையில் அஃதறிந்து மிக்க அகங்காரத்துடன் அவர்களுடன் சண்டைபோடுவதும் தலைவிரிகோலமாய் நின்றுகொண்டு நீலித்தனம் பாராட்டிச் சொவற்பமாகவிருக்கும் அன்பையும்பாழாக்கி

க்கொள்கிறதுமே சுவபாவமாகக் கொண்டிருக்கிறார்கள். அம்மா அது என்ன பிரயோஜனம். ஒட்டக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத்தாப்பாள் என்பது போலவர்களுடைய கணவர்கள் கொஞ்சம் மறைவாய் நடத்தியதும் போய்ப் பிடிவாதமாகப் பகிரங்கமான துர்நடத்தையுள்ளவர்களாக ஆகிறார்கள். ஆதலால் அங்கேபோயும் ஏதேனும் ஆவலாதி ஒன்றும் செய்யாமல் கிரமமாக அவருடைய மனம் திரும்பி ஒழுங்கான முறைக்கு வரும்படி செய்யவேண்டும். நீ அனுபவமில்லாக் குழந்தையாதலால் ஏதோ சமயம் தவறிவிட்டுவிட்டாய் என்றுசொன்னார். அதற்குச் சிந்தாமணி

ஐய, அவருடைய மனம் பாலினும் இனிமையானது. உலகத்திலுள்ள ஒவ்வொரு துர்நடத்தையிலும் அருவருப்பையுடையது. கொஞ்சமேனும் என் முகம்கோணப் பேசியறியார் தாரையைப் பாதுகாக்கும் இமைபோல நான் என்ன பிழை செய்யினும் அதை யெல்லாம் பிழையாகக் கொள்ளாமல் அளவில்லாத பிரேமையுடன் என்னோடு வாழ்ந்துவந்தார். நானும் அவருக்கு பிரியமில்லாத எச்செயலையும் செய்தவளல்லேன். ஏதோ சிலகாலம் இணை பிரியும்படியாக நேர்ந்ததுதான் இக்குற்றத்தை விளைத்தது போலும். ஒருதடவை இவ்விதம் பரிதாபப்படுகிற என்முகத்தை அவர் பார்ப்பாரானால் எவருடைய தீவினைக்கும் உட்படாமல் என்பக்கம் ஓடிவந்து எனக்காறுதல் சொல்லி அன்புடன் என்னைக் கைக்கொள்ளுவார் என்பதற்கையமில்லை என்று சொன்னாள். பிறகு கிருஷ்ணய்யரும் மஹாதேவய்யரும் தனித்து யோஜனைசெய்துகொண்டு அப்பால் கிருஷ்ணய்யர் சிந்தாமணியை நோக்கி

"அம்மா நாங்களிருவரும் உன்னுடன் கூடத் திருவனந்தபுரத்துக்கு வருகின்றோம். உன்னைப்பற்றி என்தமையனார் சந்திரசேகரய்யர் மிக்க அன்புடன் எழுதியிருக்கின்றார். அவர் சொல்வது எங்களுக்குத் தேவவாக்கியம். நாளைக்காலையில் இவ்விடமிருந்து படகுகள் புறப்படுகின்றன. நாம் அப்பொழுது இவ்விடம் விட்டுப் பிரயாணமாகித் திருவநந்தபுரத்துக்குப் போவோம். ஈசுவரகிருபையை முன்னிட்டுக்கொண்டு வேண்டிய முயற்சிகளையும் செய்வோமென்று ஆறுதலாகச் சொன்னார்.

(இன்னும் வரும்)

பி. எஸ். சுப்பிரமணிய ஐயர்.

உ

மகாமகோபாத்தியாயர்

வே. சாமிநாதையர் அவர்கள்.

சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதராகிய மகா வித்வான் வே. சாமிநாதையர் அவர்களுக்கு மகாமகோபாத்தியாயர் என்ற புதுவருஷப்பட்டம் கவர்ன்மெண்டார் அளித்ததைப்பற்றிப் பேரானந்தமடைந்தோம். இப்பட்டத்தைக் கவரன்மெண்டார் இம் மகாவித்வான் அவர்களுக்கு நெடுநாளுக்கு முன்னரேகொடுத்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட புத்திமானும் கல்வியபிவிருத்திபண்ணப் பட்ட வித்வானும் ஐரோப்பா அல்லது அமெரிக்காவிலிருந்தால் அத் தேசத்தார் அவருக்கு எத்துணையோ சிறப்புச்செய்திருப்பார்கள். கவரன்மெண்டாரும் பலவிதத்திலும் கௌரவப்படுத்தியிருப்பார்கள். மகாமகோபாத்தியாயர் வே. சாமிநாதையர் அவர்களை அறியாத தமிழ்க் கல்விமான்கள் இல்லை. கிரந்தங்களில் அவர்களுக்குள்ள அளவற்ற பிரியமும் அவைகளைத் தேடித்திரிந்து பரிசோதிப்பதில் அவர்களுக்கு இயற்கையாயுள்ள ஆவலும், செய்தொழில் ஊக்கமும், வித்வான்களிடத்திலும் பாஷாபிமானிகளிடத்தும் அவர்கள் பாராட்டும் அன்பும் கசடறக்கற்றும் கேட்டும் விஷயங்களின் நுட்பங்களை அறிகிற சாமர்த்தியமும உலகப்பிரசித்தமானவையே. இவர்களைப் போல் பாஷைக்குழைத்தவர்கள் எவரும் இல்லையென்றே சொன்னாலும் மிகையாகாது. பாஷைக்கென்று தம் உடல் பொருள் ஆவியைத் தத்தம்செய்பவர்களில் இவர்களே முதன்மை பெற்றவர். தம் வருவாயில் குடும்பகாலக்ஷேபத்துக்குப்போக மீதத்தைத் தமிழ்க் கிரந்தங்களை வெளிபிடுவதிலே இவர்கள் செலவிட்டுவரும்படியான அந்தரங்கம் சிலரே அறிவார்கள். கொலம்பஸ் அமெரிக்கா தேசத்தைக் கண்டுபிடித்தவிதமாகத்தமிழ் ஏடுகளினிருப்பிடங்களைக்கண்டுபிடித்தவர்கள் இவர்களே. இவர்களது ஆழ்ந்தஅறிவும் நுட்ப ஆராய்ச்சியும், அடக்கமும், பொறுமையும், சுறுசுறுப்பும், அன்பும், தெய்வபக்தியும், பரிசுத்தகுணமும் எவரும் பாராட்டற்பாலன. இப்பட்டப்பெயர் இவர்களுக்கு அளிக்கப்பட்ட சுதினத்தில் நாம்

நேரில் இவர்களைக்கண்டு ஆனந்திக்கும்படியான பாக்கியம் பெற்றோம். அக்காலம் இவர்களை நேரில்வந்து பார்த்து ஆனந்தம் பாராட்டியவர் பலர். இவர்களுக்குத் தமிழ் நாட்டின் பற்பல இடங்களிலிருந்து கிடைத்த தந்திகளுக்கும் கடிதங்களுக்கும் அளவில்லை. இப்பேரானந்தத்தைக் கொண்டாடாத புத்திமான்கள் இத்தமிழ் நாட்டில் இல்லை. இம்மதுரைமாநகரில் தமிழ்ச்சங்கத்தாரும் ஜனசமூகத்தாரும் இது விஷயமாகக் கூட்டங்கூடி ஐயர் அவர்களுக்கு ஆனந்தத்தைத் தந்தி மூலமாக வெளிக்காட்டினார்கள். அடுத்து இவ்வூர் மாணவர் தமிழ்ச்சங்கங்கள் மூன்றும் மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தாரது நன்முயற்சியினால் ஒன்றுகூடி அவ்வானந்தத்தைக் கொண்டாடி அதனைத் தந்திமூலமாகவே அவர்களுக்குத் தெரிவித்தார்கள். இப்பட்டம் ஐயரவர்களுக்குக் கிடைத்ததானது நம்தமிழ்நாட்டுக்கே கிடைத்ததாக நாம் பாராட்டவேண்டும். இதுகாறும் இவ்வரிய பட்டத்தை ஸம்ஸ்கிருத வித்வான்களே பெற்றுவந்தனர். தமிழ் வித்வான் ஒருவருக்கு இப்பட்டம் முதன்முதல் கொடுத்தது இச்சமயமே. தமிழ்ச் சரித்திரத்தில் இச்சம்பவம் மிகச்சிறந்த விஷயமாகக் கருதப்படுமென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஒரு நண்பர் ஒரு சபையிற் சொன்னவண்ணம் இச்சம்பவத்தைத் தமிழர்கள் அனைவரும் ஓர் உற்சவமாகவே கொண்டாடக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அந் நண்பரே ,, இம் மகாமகோபாத்தியாயர் அவர்களை இக்காலத் தமிழ்ச் சக்கரவர்த்தி என்று கூறலாம்,, என்று பாராட்டிப் பேசினதானது சாலவும் பொருத்தமே. இன்றுபோல் என்றும் இம்மகாமகோபாத்தியாயரவர்கள் தமிழ்நூல்களை ஆராய்ந்து வெளியிட்டுத் தமிழ்நாடு கல்வியறிவில் ஓங்கும் வண்ணம் செய்ய எல்லாம்வல்ல ஈசுவரன் இவர்களுக்கு நீடித்த ஆயுளையும், தேக ஆரோக்கியத்தையும், ஊக்கத்தையும், ஐசுவரியத்தையும் கொடுத்தருளும்படி பிரார்த்திக்கின்றோம்.

மதுரைத் தமிச் சங்கத்தாரும் மகாஜனங்களும் சிலதினங்களுக்குமுன் கூடியசபையில் இம்மகானைப்பற்றி வியந்து பாடிய பாடல்கள் வருமாறு:—

சேற்றூர்ச்சமஸ்தானவித்துவானும் மதுரை நான்காந்தமிழ்ச்சங்கத்து
நூற்பரிசோதகருமாகிய ஸ்ரீமத்

மு. ரா. அருணாசலக்கவிராயரவர்கள்

இயற்றியகவி:

முச்சங்கத்தினுமகாமகோபாத்தியாயரெனமொழியும்பட்டம்
அச்சங்கத்தனைநிகருஞ்சாமிநாதையனைப்போலடைந்தார்யாவர்
மெச்சங்கத்தமிழறிஞனிருப்பினுமிப்பெயர்ப்புகழால்விளங்குநான்கா
மிச்சங்கத்தினுமிதுநேரெச்சங்கத்தினுமென்றுமிருப்பன்மன்னே

2-வது அடி சங்கு அத்தனை நிகரும். அந்தப்பாஞ்சசன்னியத்தைக் கையிலுடைய திருமாலைப்போலும்.

3-வது அடி மெச்சு அங்கு அ தமிழறிஞன் (யாவரும்) புகழாநின்ற அவ்விடமாகிய சென்னையில் அந்தத்தமிழறிவினையுடைய சாமிநாதையரவர்களெனப் பொருள்காண்க. இப்பெயர்ப்புகழ் இந்தமகா மகோபாத்தியாயரென்ற பட்டப் பெயரால் வந்த கீர்த்தி.

திருக்கைலாயபரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனவித்துவானும்,
மதுரைத் தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய ஸ்ரீமத்

சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்கள்

இயற்றியகவிகள்.

நூலுரைபோதகமெனுமூன்றினுக்குமூன்றாசிரியர் நுவன்றார்முன்னே
ரேலுமம்மூவருமானதாற்சாமிநாதனெனுமிசையோனுக்குச்
சீலமிகுநம்மராசாங்கத்தாருலகமெலாந்திகழச்சொற்றார்
போலுமகாமகோபாத்தியாயரெனும்பட்டநன்குபுகழ்ந்துதாமே.

பொருத்துறைவாளின்றியறுபகைவெல்லவுபதேசம்புரியுமேலாந்
திருத்துறைசைச்சற்குருவினருளாற்செந்தமிழ்ப்புவிமேற்றிகழும்வண்ணம்
பெருத்துறையாலாறுதல்போற்பன்னூலாற்கல்விப்பெருக்கமெய்தி
மருத்துறைவானும்புகழவளர்சாமிநாதவள்ளல்வாழ்கமாதோ.

பத்திராதிபர்.

காங்கிரஸ் தீர்மானங்கள்.

முதலாவது — இந்திய ஜனங்களின் மேல் நல்லெண்ணங்கொண்டு வந்திருக்கும் மேன்மைதங்கிய வேல்ஸ் இளவரசருக்கும் இளவரசியாருக்கும் வந்தனோபசாரங் கூறுவதுடன் அவர்கள் காலஞ்சென்ற மகாராணியாரின் கருணை விளம்பரப்படி இந்தியா கவர்ன்மெண்டை சீராகநடத்தி வரும்படியான ஏற்பாடுகளைச் செய்விக்க மகாராஜாவுக்கு ஞாபக மூட்டுவார்களென்ற கோரிக்கை புரிவது.

இரண்டாவது — (கல்கட்டா ஆனரபில் மிஸ்டர் சௌதரியால் பிரேரேபிக்கப்பட்டு, சென்னை ஆனரெபில் மிஸ்டர் கோவிந்தராகவய்யரால் ஆமோதிக்கப்பட்டுப் பின்னர் சதாரா மிஸ்டர் கரண்டிகாரும், அமராவதி மிஸ்டர் கபர்த்தியும், பம்பாய் மிஸ்டர்ஆலி மகமது பீம்ஜீயும், ஆனரெபில் பாபு சுரேந்திரநாத் பானர்ஜீயும் ஆதரித்தபடி) ஜனப் பிரதி நிதி மெம்பர்களின் அபிப்பிராயம் செல்லக்கூடிய ஸ்திதிக்கு இந்திய சட்ட நிருபண சபைகள் சீர்திருத்தப்பட வேண்டியதென்பது.

மூன்றாவது — (பம்பாய் ஸர் பாலசந்திர கிருஷ்ணாவால் பிரேரேபிக்கப்பட்டு, சென்னை மிஸ்டர்நடேசனால்ஆமோதிக்கப்பட்டுப் பின்னர் லாஹோர் மிஸ்டர்பாடியா ஆதரித்தபடி. (ஸர் லேலிமெமோர்வை யநுசரித்து அப்காரி ஷாப்புகளைக் குறைக்க வேண்டிய ஏற்பாடுகளை செய்துவிடவேண்டுவதோடு பெங்காள அப்காரி மசோதாவை நிறுத்தி வைத்திருக்கும் அக்கிரமம் கவனிக்கத்தக்கதென்பது.

நாலாவது — (மதுரை மிஸ்டர் சீனிவாசராவால் பிரேரேபிக்கப்பட்டு ப்பம்பாய்ப் பிரபலதனிக குடும்பஸ்தராகிய மிஸ்டர் ஜிஹாங்கிர் பெட்டிட்டால் ஆமோதிக்கப்பட்டுப் பின்னர் அலிகர் காலேஜுமகமதியராகிய மிஸ்டர் பஸ்ஸால் உசேன் ஆதரித்தபடி) இந்திய மாகாணங்களொவ்வொன்றும் இங்கிலாண்டுக் காமன்ஸ் சபைக்கு இரண்டு மெம்பர்களை அனுப்பவும். இந்திய செக்ரிட்டெரி கவுன்ஸிலுக்கு வல்லமைசாலிகளாகிய மூன்று இந்திய மெம்பர்களை நியமிக்கவும், இந்திய கவர்னர் ஜனரல் எக்ஸிகூட்டிவ் கவுன்ஸிலில் இரண்டு மெம்பர்களும், சென்னை பம்பாய்கவர்ன்மெண்டு எக்ஸிக்கூட்டிவ் கவுன்ஸிலில் ஒவ்வோரிந்திய மெம்பரு மிருக்கவும் சுதந்திரம் பெறவேண்டியதென்பது.

ஐந்தாவது — (பரோடா பென்ஷன் சிப்ஜட்ஜி திவான் பகதூர் அம்பாலால் தேசாயால் பிரேரேபிக்கப்பட்டு, சென்னை மிஸ்டர் கிருஷ்ணசாமி அய்யரால் ஆமோதிக்கப்பட்டபடி) கலோனியல் செக்ரெட்டெரி யாபீசு செலவு போல இந்தியா செக்ரிட்டெரியாபீசு செலவையும் இங்கிலாண்டு பார்லிமெண்டாரே யேற்றுக்கொள்ள வேண்டியதோடு, இந்தியாவின் க்ஷேமத்தை முன்போலப் பார்லிமெண்டாரே விசாரித்துவர வேண்டுமென்பது.

ஆறுவது — (பம்பாய் ஹைகோர்ட்வக்கீல் மிஸ்டர் சமர்த், அலஹாபாத் பாரிஸ்டர் பண்டிதவிஷ்ணு நாராயணதார், அலஹாபாத் ஹைகோர்ட் கிரிஸ்தவ வக்கீல் மிஸ்டர் ஸைமன் இவர்கள் பேசியபடி) சர்க்கார் உத்தியோக விஷயமாய் சென்ற 1904-ம் வருஷம் மேமாசம் 24-ந் தேதி இந்தியா கெவர்ன்மெண்டார் செய்திருக்கும் ஏற்பாடுகள் சென்ற 1833-ம் வருஷத்திய பார்லிமெண்டு சட்டத்திற்கும் 1858-ம் வருஷத்திய ராஜ விளம்பரத்துக்கும் பொருந்ாதனவா யிருப்பதைப்பற்றி ஆக்ஷேபிப்பதோடு இந்திய சிவில் ஸர்விஸ் பரீக்ஷைகளை இங்கிலாண்டில் நடத்துவது போல இந்தியாவிலும் நடத்தவேண்டியதென்ற பார்லிமெண்டின் சென்ற 1893-ம் வருஷத்திய தீர்மானத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டியதுமல்லாமல் நிறுத்திவிடப் பட்டிருக்கும் புரொவின்ஷல் சிவில் ஸெர்விஸ் பரீக்ஷையும் நடத்த வேண்டியதென்பது இதில் லாயர்களே ஜட்ஜிகளாய் வரவேண்டியதென்றுங் கூறப்பட்டது.

7-ம் தீர்மானம்.

பிரேரேபகர்:— மிஸ்டர் G. சுப்பிரமணியய்யர் B. A. (சென்னை)

"கவர்ன்மெண்டார் மிச்சப்பணத்தில் சிறு பகுதியை சென்ற மார்ச்சு மாதம் காங்கிரஸின் சிபாரிசின்படி செலவிட்டது பற்றி மகிழ்ச்சி யடைகிறோம். எனினும் சென்ற 3 வருஷங்களாக இத்தேசத்தில் தீர்வை செலுத்துவோருக்குக் கவர்ன்மெண்டார் மிகவும் குறைவான சகாயம் செய்திருப்பதாக அபிப்பிராயப்படுகிறோம் ராணுவச்செலவிலும், ஐரோப்பியர்களின் சம்பளத்தை உயர்த்துவதிலும், அவர்களுக்குப் புதிய வேலைகள் ஏற்படுத்திக்கொடுப்பதிலுமே கவர்ன்மெண்டார் மீதிப்பணத்தைப் பெரும்பாலும் உபயோகித்துவிட்டமைபற்றி விசனமடைகின்றோம். இனிமேல் மிகுதிப்பணம் ஏற்படும் விஷயத்தில் அதை தீர்வை வஜா செய்வதிலும் ஜனநன்மைக்குரிய விஷயங்களிலும் செலவிடும்படி கண்டிப்பாக வற்புறுத்துகிறோம்,"

ஆமோதித்தோர்:— ராய்பகதூர்- R. N. மதோல்கர் (அமராவதி)

8-ம் தீர்மானம்.

பிரேரேபகர் மிஸ்டர் H. A. வாடியா (பம்பாய்.)

"ராணுவத்தாரின் மீது ஸிவில் உத்தியோகஸ்தர்களின் அதிகாரம் சில

த்திருக்க வேண்டும் ராணுவச் செலவு வருஷந்தோறும் அதிகரிப்பது அநீதமாகவும் ஜனங்கள் பொறுப்பதற்கரிதாகவும் இருக்கிறது. இத்தேச அனுகூலங்களுக்கு மட்டுமென்றி ஏகாதிபத்தியமுழுமையின் அந்தஸ்து நிலைநிற்கும் பொருட்டாக இத்தேசத்தில் ஸைநியம் பலப்படுத்தப்படுவதால் செலவு முழுதையும் இத்தேசத்தார் தலையிலே அமர்த்தி விடாமல் இங்கிலாண்டு வாசிகளும் மற்றும் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்தின் எல்லாப் பகுதியாரும் ஒரு பங்கு கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேணடும். ருஷ்ய ஜப்பானிய உடன்படிக்கை பற்றியும் ஆங்கிலோ ஜப்பானிய உடன்படிக்கை பற்றியும் ஏஷ்யாவில் அமைதிநிலை அதிகமுற்றிருப்பதால் இப்போது ராணுவச் சீர்திருத்தத்தின் பொருட்டு 2 கோடி பவுன் செலவழிக்கக் கருதியிருப்பதை நிறுத்திவிடவேண்டும். மேற்படி பணம் கல்வி விருத்தி குடிகளின் வரிப்பளுவைக் குறைத்தல் என்பவற்றில் உபயோகமுறவேண்டும்.

ஆமோதித்தோர்:— மிஸ்டர் V. ரைநநம்பியார் (சென்னை)
மிஸ்டர் N. B. ரங்கடே (பம்பாய்.)
பாபு கிருஷ்ண பலதேவ வர்மா.

9-ம் தீர்மானம்

இது பிரிடிஷ் குடியேற்றங்களில் இருக்கும் இந்தியர்களின் நிலைமையைப்பற்றியது

10-ம் தீர்மானம்.

ராணுவப்பயிற்சி இந்தியர்களுக்கு அதிக்ப்படுத்தப்படவேண்டுமென்றும், இவர்களுக்கு ஆயுதப்பழக்கம் அதிகரிக்குமாறு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும், இத்தீர்மானம் வற்புறுத்துகின்றது.

11-ம் தீர்மானம்.

பிரேரேபகர்:— மிஸ்டர் ராமேச சந்திரதத்.

“நீதி அதிகாரத்தையும் நிர்வாக அதிகாரத்தையும் பிரித்து விடவேண்டும் (ஒரே மனிதரிடம் கொடுத்துவிட லாகாது.) வக்கீல்களாயிருந்தோரே ஜட்ஜிகளாக வரும்படி ஏற்பாடு செய்யவேண்டும்” என்பது இந்தத் தீர்மானத்தின் கருத்து.

12-ம் தீர்மானம்.

பிரேரேபகர்:— பாபு சுரேந்திரநாத் பனர்ஜி.

இது பெங்காள மாகாணத் துண்டிப்பைப் பற்றியது. இத்தீர்மானத்தைப் பிரேரேபணை செய்யும்போது பானர்ஜி புரிந்த அற்புதப்பிரசங்கத்தைப்பற்றியும் அப்போது ஜனங்கள் எய்திநின்ற ஆவேசநிலையைப் பற்றியும் மற்றொருமுறை எழுதக் கருதியிருக்கிறோம்.

13-ம் தீர்மானம்.

பெங்காளத்தில் கவர்ன் மேண்டார் செய்யும் அதிக்கிரமங்கள்.

பிரேரேபகர்:— மிஸ்டர் மதன் மோஹன் மாலவியா.

இதை ஆமோதித்து எமது பஞ்சாப் வீரனுகிய லாலா லஜபத்ராய் செய்தபிரசங்கத்தில்பெங்காளிகள் பிரிடிஷ்சாமான்களை விலக்குதல் முதலி யவற்றில் காண்பிக்கும் ஆண்மையைப்பெரிதும் வியந்துபேசினுர். இதன் விரிவினை வேறொருநாள் எழுதக்கருதி யிருக்கின்றேம்.

13-ம் தீர்மானம்.

பிரேரேபகர்:— புரோபஸர் ஹேரம்ப சந்திர மைத்ரா.

கவர்ன்மெண்டார் பொதுக்கல்வியை சர்க்காரதிகாரத்துக்குட்படுத்திவிட முயற்சி செய்வதை இத்தீர்மானம் கண்டித்துப் பேசிற்று.

14-ம் தீர்மானம்.

பிரேரேபகர்:— மிஸ்டர்:— பாலகங்காதர திலகர்.

பஞ்சம் அடிக்கடி நிகழ்வதின் காரணம் இத்தேச ஜனங்களின் வரம்புகடந்த ஏழைமைதானென்றும் இவ்வேழைமையின் நிலைமையைப்பற்றி கவர்ன்மெண்டார் விசாரணை செய்வது அவர்களுடைய கடமைஎன்றும் கவர்ன்மெண்டாருடைய செலவுகளைக்குறைத்துக்கொள்வதுதான் ஜனங்களுடைய ஏழமையை குறைப்பதற்கு முக்கிய வழி யென்றும் இத்தீர்மானம் வற்புறுத்திற்று

15-ம் தீர்மானம்.

இது தொத்துவியாதி நிபந்தனைகளுக்காக மகமதிய யாத்திரிகளை தடங்கல் செய்யும் விஷயத்தைப் பற்றியது.

16-ம் தீர்மானம்.

மிஸ்டர் தாதாபாய் நவுரோஜியையே லண்டன்வடலாம்பெத் பேட்டையார் பார்லிமெண்டுக்குத் தெரிந்தெடுக்க வேண்டுமென இத்தீர்மானம் பிரார்த்தனை செய்துகொண்டது.

17-ம் தீர்மானம்.

இங்கிலாண்டுக்கு டெலிகேட்களாகச் சென்று திரும்பிய மிஸ்டர். கோகலேக்கும் லாலா லஜ்பத்ராய்க்கும் நன்றி யுணர்த்தலாயிற்று.

18-ம் தீர்மானம்.

காங்கிரஸின் டெலிகேட்டாக இங்லாண்டுக்கு மறுபடியும் செல்லுமாறு மிஸ்டர் கோகலே பிரார்த்தனை செய்து கொள்ளப்பட்டார்.

(சுதேசபரிபாலினி)

காகிதம் செய்தல்.

முதல் முதல் காகிதம் செய்யத் தலைப்பட்டவர்கள் பலவிதமான பழைய கந்தைத் துணிகளையும், கெட்டுப்போன காகிதங்களையுமே ஆதாரமாகக் கொண்டிருந்தார்கள். உலகத்தில் காகிதம் எவ்வளவு வேண்டியதாயிருக்கிறதோ, அந்த அளவிற்கு இந்த வஸ்துக்களைக் கொண்டு காகிதம் செய்வது போதாமலிருந்த படியினால், பிற்காலத்திலவர்கள் பச்சை நார்களையும்பற்பல பூண்டு முதலிய வஸ்துக்களையும் தேடவேண்டியதாயிற்று. இவ்வாறு சில காலம் கழிந்த பின்னர் இந்த வஸ்துக்களும் போதாமற்போயின. ஐரோப்பாவிலும்அமெரிக்காவிலும் காகிதம் செய்து விற்கும் வியாபாரத்தை மேற்கொண்டவர்த்தகர்கள் புல், பூண்டு, மரம் முதலிய தாவர வஸ்துக்களைத்தேடத்தலைப்பட்டார்கள். இதையெல்லாம் யோசித்துப் பார்க்கையில்உலகத்திலே நாகரீகமும், விவேகமும், கல்வியும் அபிவிருத்தியாய்க் கொண்டுவருந்தோறும் காகிதம் எவ்வளவு அத்தியாவசியமான பொருளாக மதிக்கப்பட்டுவருகின்றதென்பதைநாம்கரதலாமலகம்போலறிந்துகொள்ளலாம். இந்து தேசத்தவர்கள் தங்களுடைய தேசத்தில் காகிதஞ் செய்வதற்கு உபயோகமாகத் தக்க பலவேறுமாதிரியான நார்களைத் தரத்தக்க மரங்களும் செடிகளும் எங்கும் ஏராளமாயிருந்தும், காகிதஞ்செய்வதென்னும் பரோபகாரார்த்தமான வேலையில்எவ்வளவும்நாட்டம்வைப்பதில்லை. காகிதம்செய்வதற்கு வேண்டிய மேற்கண்டவஸ்துக்கள் இந்தியாவில் ஏராளமாய் அமைந்து கிடைப்பதைப்போல், உலகத்தில் வேறு எந்த தேசத்திலுமே இல்லையென்றுசொல்லலாம். சில புத்திமான்கள் இந்தியாவில் விளையும் நார்மயமான தாவரவஸ்துக்களிற் பலவற்றை ஆராய்ச்சி செய்து பார்த்ததில் சகலவிதமான காகிதங்களையும் செய்வதற்கு அதிக விலை சரசமானதாகவுமுள்ள வஸ்துக்களைக் குறைவின்றி எக்காலத்தும் இந்தியா தேசத்தில் தான் அடையக்கூடுமென்று தீர்மானித்தார்கள். காகிதம்செய்வதற்கு மிகவும் உபயோகமாகும் நார்களைத்தரத்தக்க செடிகளுக்குள்ளே இந்தியா தேசத்திலேயே உற்பத்தியாகும் முக்கியமானசிலவற்றை அடியிற் காட்டுகிறோம்.

வெண்டை, துத்தி, காசினி அல்லது புளிச்சை, சணல், கெஞ்சாச்செடி தென்னம்பட்டை, பனமட்டை, ஈச்சஞ்செடி, கமுகமரம், தாழஞ்செடி, அன்னுசிச்செடி, சாதாரண வாழைமரம், மருள், கற்றாழை, பற்பல மூங்கில்கள் பிரம்புகள் கருப்பஞ் செத்தை, அரரூட்டு, மஞ்சள், இஞ்சி ஆகிய இவற்றின் தண்டுகள், இலைகள், வைக்கோல், பற்பல புல் முதலியவை. இந்த தேசத்தில் அநேக இடங்களிலே கருப்பஞ் செத்தைகளும், தாழைமட்டை முதலி

யவைகளும் ஏராளமாயிருக்கின்றன. அவைகளெல்லாம் பயனின்றி அழுகிப் போகின்றன. அல்லது எரிதுரும்பாய் சுட்டெரிக்கப்பட்டு வருகின்றன.அதில்நமக்குவேண்டியவற்றைக் காகிதம் செய்வதற்காக உபயோகித்துக் கொண்டும், மீருந்ததை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்தும் நம்மனோர் பயனடையலாமே. இந்தப்படி அளவிறந்த வஸ்துக்கள் இமயமலை முதல் சேது சிந்து பரியந்தம் நாம் அவற்றைத் தகுந்தபடி உபயோகிக்கத் தெரிந்து கொள்ளாதபடியினாலே அவை வீணாய் மண்ணுக்கிரையாகின்றன. பூதபௌதீகசாஸ்திரங்களில் நன்றாய் கல்வி பயின்றும் கூடியமட்டில் செல்வப் புதல்வர்களாயுமிருக்கப்பட்ட இந்துக்கள் உத்தியோகமென்னும் சேவகத்தை ஒரு பொருளென மதியாது காகித யந்திரசாலை வைப்பது முதலிய சுயேச்சையான வாழ்க்கையையே விரும்புவாராக. காகிதஞ் செய்வதற்கு அத்தியாவசியமாக வேண்டிய அரும்பொருள்களில் மிகவும் வறியவர்களே யாயினும் இங்கிலாந்து தேசத்தவர்கள் அதிகப்பிரயாசைப்பட்டு மிக்க பொருள்கள் விரயம் செய்து அப்படிப்பட்ட வஸ்துக்களை இந்தியாவிலிருந்தும் வேறேபிரதேசங்களிலிருந்தும் அயர்விலா ஊக்கத்துடன் தேடிக்கொண்டு போய் திவ்வியமான காகிதவகைகளை யுண்டாக்கி இந்து தேசவாசிகளாகிய நமக்கும் ஏனைய தேசத்தவர்களுக்கும் கொடுத்துக் கொண்டு வருகிறார்களல்லவா?

அதனால் அவர்கள் எவ்வளவு பயனடைகிறார்கள்! மேற்படி வஸ்துக்கள் யாவும் நம்முடைய தேசத்திலே இயற்கையில் உற்பத்தியாகத் தக்கவைகளாகவும் நாம் எவ்வளவும் மெய்வருந்தாமலே சொற்ப விலைக்கே இருந்தவிடத்திலிருந்து அடையத்தக்க வைகளாகவுமிருந்தும் நாம் "பிழைப்பில்லை பிழைப்பில்லை" என்று சொல்லித்திரிவது தகுமா? காகிதம் என்னும் ஒரு வர்த்தகத்துக்கு மாத்திரம் இந்தியா தேசமானது ஐரோப்பா கண்டத்திற்கு வருஷந்தோறும் சற்றேறக்குறைய 50,00,000 ரூபாய் செலுத்துகிறது. அந்தத் தொகையில் ஒவ்வொரு ரூபாயையும் இந்துக்கள் இந்தியாவிலேயே வைத்திருக்க வேண்டும். இந்து தேசவாசிகள் அக்காகிதத்தைப் பிறரிடத்திலிருந்து வாங்குவதை விடுத்துத் தாங்கள் பிறருக்கு அதனை விற்பனை செய்யக்கூடிய நிலைமைக்கு இனியேனும் வருவதற்கு சுதேசியத்தைப் பின்பற்றுவோர் அனைவரும் முயலவேண்டும்.

"சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்" என்பது எல்லோரும் அறிந்த பழமொழியேயாம். ஆயினும், நாம் அதனை யனுசரித்துமட்டும் நடப்பதைக் காணோம். அந்த வாக்கியத்தினால் நாம் தெரிந்துகொள்ளும் முக்கியமான விஷயமாவது உலக சிருஷ்டியில் எதுவும் பயனற்றதன்று என்பதாம். இப்பொழுது நாம் அநேக பதார்த்தங்களை அவை யுபயோகமற்றவையென கவனியாது விடுகின்றோம். ஒவ்வொரு பதார்த்தத்தின் ஒவ்வொரு பாகமும்

அமிசமும் மனிதனது சௌகரியத்திற்கேனும், சந்தோஷத்திற்கேனும் உதவுமாறு அமைக்கப் பட்டிருக்கின்றது, எதுவும் வீணாகாது. எதையாவது நாம் வீணென்று நினைப்போமாயின், அதனை யுபயோகிக்கும் வகை நமக்குத் தெரியவில்லையென்றும், நமது புத்திக் கூர்மையுஞ் சாஸ்திரப் பயிற்சியும் போதாதென்றும் அர்த்தமாகும். இப்பொழுது நாம் பாழாக்கிவரும் பதார்த்தங்களைப் பிரயோஜனப்படுத்தினால் தேசத்தில் கைத்தொழிலபிவிருத்தியும், செல்வ உற்பத்தியும், எல்லாவித சௌக்கியங்களும், செழுமையும் உண்டாகும் என்பதில் ஐயமில்லை. சென்ற இருபது ஆண்டுகளாக ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஜனங்கள் இவ்வாறு வீணெனப்படும் பதார்த்தங்களைப் பிரயோஜனப்படுத்தி தம் யுக்தி சாகஸங்களினால் வியாபாரசாபாரங்களில் முதன்மையராகி செல்வவான்களாய் விளங்குகின்றார்கள். முக்கியமாய் அமெரிக்காவில் இவ்விஷயம் அதிகமாய் கவனிக்கப்பட்டு வருகின்றது. துரைத்தனத்தார் இதனைப்பற்றி அறிக்கைப் புத்தகமொன்றும் வெளியாக்கியுள்ளார். எந்தக் கைத்தொழிலைக் கவனித்துப் பார்க்கினும், அவர்கள் அதனிற் பண்டங்கள் பழுதுபோகாவண்ணம் புத்திசாதுரியத்தினால் ஏற்பாடு செய்திருக்கின்றனர்: இரும்பு, எஃகு முதலிய கைத்தொழில்கள் நடக்கும் சாலையில் விழும் கிட்டங்கள் (மலினங்கள்) இதுகாறும் எந்தவேலைக்கும் உபயோகிக்கப்படாதிருந்தன. இப்பொழுதோவெனின் அவை கட்டடங்கள் கட்டவும், ரோட்டுகள் கெட்டிக்கவும் உபயோகப்படுகின்றன. அவைகளைக் கொண்டு நல்ல செங்கற்கள் செய்கிறார்கள். இதற்கென்று அநேகம் தொழிற்சாலைகள் ஐரோப்பிய நாடுகளில் முக்கியமாய் ஜர்மனியில் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விதமாக மரவேலை செய்யுமிடங்களில் விழும் தூள்களையும், உலைகளினின்று வெளியேறி வீண்போகும் ஆவிகளையும் பற்பல வகைகளில் உபயோகமாக்கிவிட்டார்கள். அவைகளுக்கேற்ற யந்திரங்களும் ஏற்பட்டுவிட்டன இந்த முயற்சியினால் கைத்தொழில்களும் அபிவிருத்தியாயின, ஏழைகளுக்கும் பிழைப்புக்கிடமாயிற்று; வியாபாரமும் பலப்பட்டது பாழென்றெண்ணியது பணந்தரலாயிற்று. இவ்விதமாய் சாகஸம் செய்வோர் முன்னுக்கு வருவார்களா? பிரயத்தனம் சிறிதுமின்றி எருமையின்மீது மழை பெய்தது போலிருக்கும் நாம் முன்னுக்கு வருவோமா? திருவாங்கூர் சமஸ்தானத்தில் தென்னைமட்டைகளை ஊறப்போட்டு அடித்துக் கயிறு திரிக்கும் தொழில்கள் வெகு மும்மரம். அம்மட்டைகளை யடிக்கும்பொழுது உதிரும் தூள் எங்குப்பார்ப்பினும் பெருமலைக்குவியலாக வீணே கிடக்கின்றன. இந்தத்தூளை கெட்டியாய்ப் பிசைந்து கொட்டாங்கச்சியிலடைத்துக் காயவைத்தால் நல்ல விறகாகாதோ? ரயில்வே எஞ்சின்களுக்கும் பஞ்சாலைகளுக்கும் நாட்டிலும் காட்டிலுமுள்ள மரங்களை வெட்டிச் சாய்த்துவருமிந்நாளில் விறகின் விலை யதிகமாயிற்றே. பாரஸ்ட் இலாகாவின் கொடுமைசகிக்க முடி

யவில்லையே என்று ஜனங்கள் துக்கித்துத்திரிகின்றார்களே. நமது ஊர்ச்சாலைகளிலும், காடுமேடுகளிலும் கருவேலமரங்களினின்று உதிரும் காய்கள் கணக்குவழக்கின்றி வீணாய்கிடக்கின்றனவே. அவைகறுப்புச்சாயமேற்றுவதற்கும் வினைய காரியங்களுக்கும் உபயோகப்படுமாறு நாம் என் யுக்திசெய்யக்கூடாது? இப்பொழுது உபயோகித்து வரும்சீக்காய், பூந்திக்காய்முதலியவைகளில் எத்தனை பாகம் வீண் போகின்றது. இங்ஙனமாகாது அவைகளைசோப்பைபோன்ற கட்டிகளாய் என்செய்யக்கூடாது. இந்தியர்கள் பௌதீக சாஸ்திரங்கள் படித்து வருவதன் பயன் யாது? ஆங்கிலேய வைத்தியங் கற்று அம்முறைகளிற்றேர்ந்த இந்துக்கள் நம் நாட்டின் செடி, கொடி, கிழங்கு பழங்களைப்பரீக்ஷித்து உலகத்திற்கு உபயோகமான மருந்துகளைச் செய்து அவற்றின் குணங்களை வெளியாக்கி இந்தியாவின் செல்வத்தை யபிவிருத்தி செய்யத்தகாதோ? இத்தேசத்தில் உபயோகப்படுத்தப்படும் பண்டங்களின் சங்கியை விட வீண்போகும் பண்டங்களின் சங்கியை யதிகமாயிருக்கின்றன. இவற்றையெல்லாம் நாம் நல்லுபயோகம் செய்யும் வரை நம் வறுமை நீங்காது.

(சுதேசமித்திரன்).

"முத்தி அடையும் வழி."

முத்தி சுலபமாய் எவ்விதம் அடையலாம் என்பதை அடியில் வருமாறு வெளிப்படுத்த முயலுகின்றனன். கல்விமான்கள் இதைப்பற்றி அதிக விஸ்தாரமாக வரைந்திருக்கின்றனர். புல்லறிவாளியாகிய நான், ஞானிகளினிடமாகக் கேட்டதும், அனேக புஸ்தகங்களின் வழியாகக்கற்றதுமான சில விஷயங்களைச் சுருக்கிச் சொல்லத் துணிகின்றனன்.

காலமும், மானிடரின் வாழ்நாளும் ஸ்திரமல்ல. அப்படி யிருந்தும் மாந்தரின் வாழ்நாட்களிற் பாதி தூக்கத்தில்போக, மற்ற பாதியின் பல காலம், அர்த்த, காமங்களைத் தேடி, அனுபவிப்பதிலேயே, வீணாகக் கழிகின்றன. கறுமையான (சிகா) கேசங்கள் வெண்ணிறமாகவே, முடிவு முன்னால் காத்துக்கொண்டிருக்கின்றது என்பதை அறியவேண்டியவர்களா யிருக்கிறோம். பிறகு மூப்புக்காலம் சமீபிக்கப் பிணியும் பின் தொடரும். அதன் பின் பிரயாண காலம் சித்தம். ஆகையால் ஸ்ரீமன் நாராயணனை சதா தியானஞ் செய்து முத்தி அடையும் வழியைத் தேடுவதே நம்முடைய முக்கிய நோக்கமாயிருக்கவேண்டும். அனேகம் தடவைகளில் ஈசுவரன், இம்மேதினியில் அவதரித்து, சாது ஜனங்களுக்குத் தன்னையடையும் வழியைப்

போதித்திருக்கிறார். ஆனால் மனிதர்கள் மதியீனத்தினால், சம்சார சாகரத்தில் மூழ்கி அவனை மறந்து விடுகிறார்கள். அனேக ஜீவன் முக்தர்கள், ஜீவகோடிகளினிடம் வைத்திருக்கும் அன்பினால், எவன் தன்னைச் சரணமாக அடைகிறானோ, அவனை உத்தரிக்கத் தயாராயிருக்கிறார். இவ்விதம் உத்தரிக்கும் ஜீவன் முக்தர்களையே, ஆங்கில பாஷையில் (Master) என்றும் வடமொழியில் பரமபாகவதர்களென்றும், சொல்வது புஜபலபராக்கிரமத்தில் முதல்வனான ஹிரணிய னென்னும் நாமத்தை வகித்தவனது உதரத்தில் ஜனித்தவனான பிரஹலாத னென்பவனே, ஜீவன் முக்தர்களில், சிறந்தவன். இக்காலத்தில் ஜனங்கள், தாங்கள் வருந்தி அடைய முயலாமல், கலியுகத்தின் பேரில் பழியைச் சுமத்துகிறார்கள். அது சுத்தப் பிசகு. மற்ற யுகங்களில் அனேக காலம் கடுந்தவஞ் செய்யினும் கிடைக்காத பலன் இக்கலியுகத்தில் சுலபமாகக் கிடைக்கும் என்பதை அறிந்திலர் போலும். இக்கலியுகத்தில் முக்தி யடையும் விதையை விதைத்தால், கூடிய சீக்கிரத்தில் நல்ல பலனைத் தருமாகையால், இதுவே தகுந்த சமயம் என்றறிக: உதாரணமாக.

சில்லறைத் தேவதைகளையே பஜனை செய்து, தன் வாழ்நாளை வீணாகக் கழித்து வந்த கட்டுவாங்கதன் என்னும் மகாராஜன், மரண காலம் சமீபிக்கவே, சர்வோத்தமனான ஸ்ரீபகவானை தியானஞ் செய்து முக்தியடைந்ததை எல்லோரும் அறிவீர்களல்லவா? ஒரு வாரம் அல்லது ஏழே நாள்களில், தன் மனத்தை இடைவிடாமல் ஸ்ரீஹரியினிடம் வைத்துத் தியானஞ் செய்து அதனால் மோக்ஷத்தை யடைந்த அருச்சுனனுடைய பேரனாகிய பரீக்ஷித்து மகாராஜாவுடைய கதையை வாசித்திருக்கிறோமல்லவா? பகவானைப் பிரியத்தினாலாவது, துவேஷத்தினாலாவது பயத்தினாலாவது, எப்பொழுதும் தியானஞ் செய்யலாம். அபிப்பிராய பேதப்பட்டாலும், இடைவிடாமல், அவனையே ஸ்மரித்துக் கொண்டிருக்கவேண்டும். சதாசினேகித்தினால் அல்லது (காமத்தினால்) கோபிகளும் கஞ்சனும், சிசுபாலனும் சதா துவேஷத்தினாலும், விரிஷ்னிகளும், பாண்டவர்களும், பாந்தௌயத்தினாலும், பக்தியினாலும், ஸ்ரீஹரியை அடையவில்லையா? பகவானை அடைய பல வழிகள் இருப்பினும், பக்தி மார்க்கமே சிறந்தன என்று அறிவது நலம். அம்மார்க்கத்தில் பிரவேசிக்கப்பட்டவனுக்கு சுகமும் சந்தோஷமும் மனத் திருப்தியும் உண்டாகின்றன. ஏனைய வழிகளில் தன் மனத்தைச் செலுத்தப்பட்டவன் முடிவில் முக்தியை அடைவதாயிருந்தாலும், மத்தியில் துன்பமும் கஷ்டமும் அடைகிறான். அதற்கு உதாரணமாக கஞ்சனையும் சிசுபாலனையும் எடுத்துக்கூறவும் வேண்டுமோ? நம் ஆழ்வார்களும் ஆசா

ரியர்களும். பக்தி மார்க்கத்தையே அனுசரிக்கும்படி நமக்குக் காட்டியிருக்கிறார். இம்மார்க்கத்தை எவன் அனுசரிக்கிறானோ அவன் பிரபன்னன் அல்லது சரணாகதி யடைந்தவனாவான். அவன் தன் உடல், பொருள், ஆவி இவைகள் அனைத்தையும் ஈசுவரனுக்குத் தத்தம் செய்து விடுகிறான். ஓர் ஹிந்து மனைவி எங்ஙனம் தன் கணவனுக்கு அனைத்தையும் தத்தம் செய்கிறாளோ அம்மாதிரியே. ஆகையால் நாமும், ஸ்ரீ நாராயணனை சரணாகதியடைவோமாக.

ஈசுவரன் சர்வத்ர வியாப்தனென்றும், சர்வ ஜீவகோடிகளுடைய ஹிருதயத்திலும் வசிக்கிறான் என்றும் நாம் அறியும்பொழுது, நாம் சர்வரிடத்திலும் பிரியமுள்ளவர்களாயிருக்கவேண்டும். இப்பேர்க்கொத்த எண்ணத்தை அனுசரணை அல்லது பழக்கத்திற்குக் கொண்டுவரும் பக்ஷத்தில், நமக்கு எவன் தீங்கு செய்யினும் அதை ஒரு பொருட்டாக எண்ணாமல், நன்மையையே செய்யப் பிரயத்தனப் படுவோர்களாவோம். ஆகையால் எவன் ஒருவன் ஸ்ரீமந்நாராயணனையே சரணமாக அடைகிறானோ அவன் இச் சம்சாரபந்தத்திலிருந்து விடுவிக்கப்பட்டு முக்தி யடைகிறான். அடக்கமும் பக்தியும் ஸ்திரீகள் ரூபமாக அவதரித்திருக்கின்றன. அப்பேர்க்கொத்த ஸ்திரீ ரத்தினங்களின் உதரத்தில் ஜனிக்கும் புருஷ மணிகள். தங்கள் மாதாக்களினால், நற்குணங்களைக் கற்றுக்கொண்டு, ஈசுவரனிடம் அதிக பக்தி செலுத்தி சகல ஆன்மாக்களிடமும் பிரியமாயிருந்து அன்பு காட்டி, கடைசியாக முக்தியை அடைகிறார்கள்.

எம். ராகவேந்திராச்சார்.

மஹாமகோபாத்தியாயப்பட்டமகிழ்ச்சிக் கவிகள்.

அரிமழம் ஸ்ரீமத்-சிவாநந்தசுவாமிகள் இயற்றியவை.

மதியணியும்பொன்முடியார்அன்பினைந்தினை திருவாய்மலர்ந்த மாண்பார்
அதிமதுரத்தமிழ்மேன்மைஅறிந்துகற்றுத்தமிழ்மடந்தைஅந்தோஎற்குக்
கதியேதிங் காதரிப்பார் எவரென்னக் கலுழுங்கால் கண்ணீர் மாற்றிச்
சதிமகிணன் மகிழ்பெரும்பே ராசார்யப் பெயர்படைத்தாய் சாமிநாதா. (க)

[வாக்கைத்
வடமொழிக்குத் தென்மொழியே சமமென்னப் பெரியரெலாம் வழுத்துங்
திடமுறுத்தத்தென்மொழியிற்பெரும்போராசிரியனெனச்சிறப்புப் பெற்றுய்
படவரவப் பாயுடையா னுதிய ர்பலவிய முழக்கப் பரமா நந்த
நட மிறைவ னிது தெரிந்து சிற்சபையின் முன்னரே நடிக்கின் றானல். (௨)

[பின்னுட்
மலைமகடன்கொழுநனன்பர்க்கருண் மழைபோற்கவிமழைபெய் மன்னன்
கலைமகடன் கலி நீங்கப் பெரும் பேரா சிரிய னெனக் கவின் பேர் பூண்டெங்
தலை மகவு விளங்கு மக்காற் கூடல் வளர் சங்கத்திற் றக்கா ரோடும்
அலைமகரப்புவிபுரக்கும்பாண்டியன்சொண்டாட்டயர்வான் அதனைக்காண.

இக்கண்ணும் புகழ் கேட்க இச்செவியும் மகிழ் வெய்த இந்த நெஞ்சுந்
தக்கனவன் றுதலி னுற் சாலவிவை யுடைய வந்தச் சங்கரன் றுள்
புக்கனந்த ஆநந்தம் புசிப்ப லெனப் போயினனே போலும் நங்கள்
திக்கனைத்தும் மிகப் புகழு மீனுக்ஷி, சுந்தரனுந் தெள்ளி, யோனே. (௩)

கரும் பேரா சிரியர் நச்சி னர்க் கினியர் இனியவுரை கவினப் பின்னுேர்
தரும் பேரா சிரியச்சிந் தாமணியா திய நூலீ சாமி நாதன்
பெரும்பேராசிரியனெனப்பெயர்பெறுங்காற்பராநந்தம்பெறுவே னென்றே
அரும்பேரா சிரியர் சிவாநந்தன் என எனக்களித்தார் அறிஞர் அன்றே--டு

—:(o):——

மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்து அக்கிராசனுதிபதியாகிய

மிஸ்டர் M. கோபால கிருஷ்ணையர்

இயற்றியவை.

மண்ணியல் மாந்தர் தம்முள் வண்டமிழ் வளர்ப்பொன்றேயே
கண்ணிய கடப்பாடாகக் கருதியோர் யாரேகண்டாய்?
திண்ணிய புகழேபூண்ட திறமையோய் அரசாங்கத்தார்
புண்ணிய நினக்கிப்பட்டம் புனைந்ததிற் புதுமை என்னே? (1)

வேறு.

சும்மாதன் காலமெல்லாம் தூயதமிழ்க் கேயுழைப்போய்!
கைம்மாறு முளகொல்லோ கணிப்பறுநின் நன்முயற்சிக்
கெம்மாவி உடல்பொருள்என் றிவைமூன்றுந் தந்திடினும்
அம்மா! நின் பேருதவிக் காகும் இணை எதுவே? (2)

வேறு.

மேற்றிசையோ ராகியநம் துரைத்தனத்தா ருந்தமிழில் மிகவும் தேர்ந்து
போற்றுமகா மகோபாத்தி யாயரெனப் பொருந்துமிந்தப் பட்டந்தன்னை
நாற்றிசையும் புகழ்மணக்கும வே. சாமிநாத !நிற்கு நல்கித்தாமே
சாற்றரிய புகழ்படைத்தார் என்ச்சாற்றில் இதிற்சிறிதும் தவறுண்டேயோ?

சமாசாரக்கொத்து.

தென்காகித்தாலுகா கம்மாச்சேரி கிராமத்தில் ஒரு பசு இரண்டு கன்றை ஒரேகாலத்தில் ஈன்றது. எல்லாம் வளர்கின்றன. இதுவும் ஒருவிந்தையே.

அடுத்த மேமீ டார்ஜிலிங்கில் ஒரு பொருட்காட்சி கூடும்.

போஸ்டாபீஸ் உத்தியோகஸ்தர்கள் அடுத்த மாதாரம்பத்தில் கல்கட்டாவில் ஒரு கூட்டம் கூடுவார்கள்.

இந்தியாவிலுள்ள பீரங்கிப்படைகளுக்குப் புதிய ஆயுதங்கள் கொடுப்பதற்காக இவ்வருஷம் கோடிரூபாவுக்குமேல் செலவாகியிருக்கிறதாம்.

சென்றவருஷம் ஏப்பிரல் மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம்வரை 34 கோடியே 70லக்ஷம் கடிதங்களும் பார்ஸல்களும் இந்தியாவிலுள்ள தபாலாபீசு மூலமாயனுப்பப்பட்டிருக்கின்றன.

கல்கத்தாவில் அம்மைநோய் தோன்றியிருப்பதால் எல்லாரும் அம்மை குத்திக்கொண்டிருக்கிறார்கள். நம் லார்ட் மிண்டோ அவர்களும் அவர்கள(ு) பெருமாட்டியும் அவரது பரிவாரத்தார்களும் அம்மை குத்திக்கொண்டார்கள். இது நல்ல முன்மாதிரி.

சென்னை பச்சையப்பன் காலேஜ் தலைமை உபாத்தியாயர் மிஸ்டர் ஜே. ஏ. எட்ஸ் என்பவர் வித்தியா இலாகா இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டிருக்கிறார். காலேஜுக்கு இஃது ஒருபெரு நஷ்டமே.

வடக்கு இந்தியாவில் பஞ்சக்குறிகள் பலமாய்த் தோன்றியிருக்கின்றன. உணவு தானியங்களின் விலைகள் வரவர உயர்ந்துகொண்டு வருகின்றன. பஞ்ச நிவிர்த்திச்சாலைகளில் முன்னிலும் அதிக ஜனங்கள் வந்து சேர்ந்திருக்கிறார்கள். ஐக்கியமாகாணங்களில் 51000 பேரும், மத்திய இந்தியாவில் 22ஆயிரம்பேரும் பஞ்ச நிவிர்த்திச்சாலையில் வந்து கூடியிருக்கிறார்கள். இஃதென்ன பரிதாபம்.

ஜப்பான் தேசத்துக்கு இவ்வருஷம் 79லட்சம் பவுன் வரவில் குறைந்திருப்பதால் ஜப்பான் கவர்ன்மெண்டார் இவ்வளவு தொகையும் கடன்வாங்கப்போவதாகச் சொல்லப்படுகிறது.

ஆனரெபில் மிஸ்டர் வி. ஸீ. தேசிகாசாரியார் அவர்களும் மிஸ்டர் கிங்கும் இளவரசர் என்டர்டேன்மெண்ட் விஷயமாய் எடுத்துக்கொண்ட சிரத்தையின் நிமித்தம் இம்மாதம் 27வ பகல் 3½-மணிக்கு வேல்ஸ் இளவரசர் அவர்கள் இருவருக்கும் நைட் பட்டம் அளித்தார்கள்.

ராவ் பகதூர் ஜம்புலிங்கமுதலியாரின் மரணம்: சென்னை ஹைகோர்ட் ஜட்ஜ் மிஸ்டர் ஜம்புலிங்கமுதலியாரவர்கள் நம் இளவரசர் சென்னைக்கு விஜயஞ்செய்த 24வ மாலை காலஞ்சென்றாரென்று கேட்டு மிகவும் துக்கப்படுகிறோம். இவர் இவ்வேலைக்கு வந்து மூன்றுவருஷகாலமிருக்கும் இவர் கடப்பையில் பெரிய வக்கீலாகவும் சென்னை சட்ட நிரூபண சபை மெம்பராகவும் இருந்து ஜனங்களுக்கும் காங்கிரெஸுக்கும் மிகவும் உபகாரஞ் செய்து வந்தார். இவர் ஜனரஞ்சிதர். குணசாலி இவரது மரணம் அகாலமேயாகும். நெடுநாளாய் வியாதியால் பீடிக்கப்பட்டு வந்திருந்தார். இவரைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் நாம் நம் துக்கத்தைத் தெரிவிக்கிறோம்.

நம் தாதாபாய் நௌரோஜி யவர்களுக்கு இந்த எலக்ஷனில் பார்லிமெண்டு ஸ்தானம் கிடைக்காததைப் பற்றி நாம் மிகவும் விசனிக்கிறோம். இனி இவர் தம் தன்மைப்பருவத்தைத் தாய் நாட்டில் செலவழிப்பதே யுக்தமெனத் தோற்றுகிறது.

பத்தொன்பது வருஷங்களுக்கு முன்னர் நம்சென்னை கவர்னராயிருந்த ஸர் எம். ஈ. கிராண்ட்டப் என்பவர் மரணமடைந்தார். இவர் பாஷா நிபுணர்களில் ஒருவர். இவரது இராஜ தந்திர அறிவு அத்துணை சிறப்புடையதாகமாட்டாது.

இந்தியா முழுவதிலும் பிளேக் மரணம் வரவர அதிகரித்துவருகிறது. சென்ற டிசம்பர் மாதம் கடைசிவாரத்தில் 3282 பேரும் இம்மாதம்முதல் வாரத்தில் 4728 பேரும் மரித்தார்கள். இக்கொடிய நோய் என்று நம் தேசத்தைவிட்டுத் தொலையுமோ அறியோம்.

இம்மாதம் 13வ சனிக்கிழமை இரவு திருவனந்தபுரத்தில் லக்ஷதீபக் கொண்டாட்டம் நடந்தது. வெகு அலங்காரமாயிருந்தது.

கவர்ன்மெண்டார் பணம் செலவழித்து ஜப்பானிய நெசவு தறிகளை வாங்கலாமென மிஸ்டர் சாட்டர்டன் செய்த ஆலோசனையைச் சென்னை கவர்ன்மெண்டார் அங்கீகரித்திருக்கின்றார்கள்.

இந்தியாவில் சுரங்கசாஸ்திரமும் பூகோளசாஸ்திரமும் கற்றுக்கொடுக்கும்படியாக ஒரு கலாசாலை இம்மாதம் 16வ ஸ்தாபிக்கப்பட்டது.

பம்பாயில் சில ஜைன மதத்தார்களிருக்கின்றார்கள். அவர்களிற் சிலர் பணக்காரர்கள். இம்மதஸ்தருக்காக ஒருபள்ளிக்கூடமும் ஆஸ்பத்திரியும் பம்பாயிற் புதிதாகக்கட்டப்பட்டிருக்கின்றன. பாபுபன்னுலால் பூரன் சந்து என்பவர் 4லக்ஷம் ரூபா நிதி எற்படுத்த அதிலிருந்து இரண்டு லக்ஷம்ரூபா செலவில் மேற்கூறிய பள்ளிக்கூடமும் ஆஸ்பத்திரியும் கட்டப்பட்டிருக்கின்றன. வித்தியாவிஷயமாயும் தேக ஆரோக்கியத்தின் விஷயமாகவும் பணஞ்செலவு செய்தது பெரும் புண்ணியமே.

காசியில்கூடிய பொருட்காட்சியார் சென்னை ஸ்கூல் ஆவ் ஆர்ட்ஸார் அனுப்பிய நெசவு கைத்தறிக்காக ஒருதங்கப்பதக்கமும் குரோம்தோலுக்காக ஒருதங்கப்பதக்கமும், வெள்ளிச்சாமான் செய்ததற்காக ஒருதங்கப்பதக்கமும் குரோம்தோல் பூட்ஸுக்காக ஒரு வெள்ளிப்பதக்கமும் குரோம்தோல் சேணம் செய்ததற்காக ஒரு வெண்கலப்பதக்கமும் அளித்திருக்கின்றார்கள் என்பதைக்கேட்டுச் சந்தோஷிக்கிறோம்.

கல்கத்தா நாஷனல் பண்டுக்கு இதுவரை லக்ஷம் ரூபா சேர்ந்திருக்கிறது.

சென்னையிலுள்ள மகமதியர்கள் லார்ட் ஆண்ட்ஹில்லின் ஞாபகசின்னமாக ஒருமண்டபம் கட்டவேண்டுமெனப் பணம் சேர்த்துவருகின்றார்கள்.

டாக்டர் கிளின் என்பவர் பிளேக் நோய்க்குப் புதிதாக மருந்தொன்று கண்டுபிடித்திருக்கின்றாராம். இம்மருந்து ஒருவிதப்பொடி. இஃது அதிக சீக்கிரம் வியாதியைக் குணப்படுத்துமென்றும் போதுமான மட்டும் உடனே நாம் அதனைச் செய்துகொள்ளலாமென்றும் சொல்லப்படுகின்றது.

சென்ற கான்ஸர்வேடிவ் கவர்ன்மெண்டாரால் செய்யப்பட்ட இராணுவ சம்பந்தமான தீர்மானங்களெல்லாம் மிஸ்டர் ஜான்மார்லியின் அபிப்பிராயத்தின்பேரில் மாற்றிவிடப்பட்டு லார்டு கிச்சினர் ராஜிநாமா கொடுக்க நேர்ந்தால் அவருக்குப் பதில் ஸர் அயர்ஹாமில்டன் நியமனம் பெறக்கூடும் என்று ஸிம்லாவில் வதந்தியாயிருக்கிறதாக அறிகிறோம்.

ஆனரெபில் மிஸ்டர் கோக்லேக்கு வேல்ஸ் இளவரசர் பேட்டி கொடுத்தார் என்றும் ஆனால் முக்கியமான விஷயம் சம்பந்தமான யாதொன்றும் பிரஸ்தாபமின்றிப் பொதுவாகச் சொற்பநேரம் வார்த்தையாடிக் கொண்டிருந்து திரும்பி விட்டாரென்றும் தெரிய வருகிறது.

சென்னையில் சுதேச வாசிகள் வசிக்கும் பட்டணத்திற்கு ஐரோப்பியர் வழங்கிய பெயர் பிளாக் டவுன். அதாவது கறுப்பு மனிதர்கள் வசிக்கும் ஸ்தலம் என்பது யாவரும் அறிந்ததே. வேல்ஸ் இளவரசர் ஞாபகார்த்தமாகப் பட்டணத்துக்கு "ஜார்ஜ்டவுன்" என்று பெயர் மாற்றப்பட்டதென்று கேள்விப்பட்டுச் சந்தோஷிக்கிறோம். லார்ட் ஸாலிஸ்பரி பிளாக்மான்' என்று பேசிய குறைபோன்ற விஷயம் இனியாவது நம்மை விட்டகலுமென்று நம்புகிறோம்.

இடலிதேசத்திலுள்ள விஸூவியஸ் ஸிஸிலித்தீவிலுள்ள எட்னு என்றஅக்னி மலைகள் இப்போதுவெடித்து அக்கினிக்குழம்புகளைக் கக்கிக்கொண்டுவருகின்றனவாம். இதனால் ஜனங்களுக்குண்டாகும் சங்கடத்திற்கு எல்லையில்லை. பலமுறை இதற்கு முன் இவ்விடத்தில் இக்குழப்பம்உண்டாகி ஜனங்களுக்குப் பெருத்த கேட்டை விளைவித்திருக்கின்றன.

நம் சென்னைப் பிரசித்த வக்கீலாகிய மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யரவர்கள் ஹிந்து வைத்திய சாஸ்திர கலாசாலை யொன்று ஸ்தாபிக்க ரூ 25, 000 நன் கொடையளித்திருப்பதை நம் நேயர்கள் அறிவார்களே. இப்போது காசியில் ஏற்பட்டிருப்பது போல் சென்னையிலும் ஒரு ஸமஸ்கிருத கலா சாலை ஏற்படுத்தும்பொருட்டு ரூ 25, 000 நன் கொடை யளித்திருப்பதாக அறிந்து ஆனந்த மடைகிறோம். "ஈதற்குச் செய்க பொருளை" என்ற ஆன்றோர் வசனத்தை ஐயர் அவர்கள் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவந்திருப்பது மிகவும் புகழத்தக்கதே. செல்வவான்களெல்லாம் அவ்விதம் செய்தலே புண்ணியமும் புகழுமாம்.

மதுரை ஹிந்துப் பெண்களின் கல்வியபிவிருத்தியைப்பற்றி பலத்த முயற்சி நடந்து வருகின்றது. ஸ்ரீமீனாக்ஷி வித்தியாசாலை" என்ற பெயருடன் ஒரு வித்தியாசாலை சமீப காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. அதற்கென்று கட்டிய புதிய கட்டடக் கிருகப் பிரவேசம் மிக்க விமரிசையாகநடந்தது பல கனவான்கள் விஜயஞ்செய்திருந்தார்கள். பெண் கல்வியபிவிருத்தி பண்ணுவதில் நாம் ஊக்கமுடையவர்களாயிருப்பது சரியே. ஆனால் நம் பெண்களை ஹிந்துப் பெண்களாகவேவைத்துக் கல்வி புகட்டவேண்டுமே யொழிய ஐரோப்பியப் பெண்களைப்போல் ஆக்கி விடக்கூடாது.

சிரியா தேசத்துப் பெண் ஒருத்தியை ஒருவன் 12-ஆயிரம் பவனுக்கு ஏலம் எடுத்தானாம். இன்னும் அடிமைத்தனம் நாட்டை விட்டுத்தொலைந்த பாடில்லை.

சிலர் ஜாதிக்காயில் எண்ணெய் எடுத்து சவர்க்காரம் பரிமள நீர் முதலான வைகளுக்கு உபயோகப் படுத்துகிற தந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

ஒரு சீனன் 72- அடி ஆழம் மூழ்கி ஒரு வெள்ளி சாமானை எடுத்த தற்காக 300 வெள்ளி வெகுமதி பெற்றானாம்.

அம்பாலா என்னுமிடத்தில் கண்ணாடிகள் செய்யும் கம்பெனி ஒன்று ஏற்பட்டிருக்கிறதாம். அதில் அநேக விதமான மருந்து சீசாக்களும் ஊறுகாய் ஜாடிகளும், மைக்கூடுகளும், மற்றுமுள்ள சில்லறை சாமான்களும், செய்யப் படுகின்றனவாம். சுதேசி முயற்சி இன்னும் சொற்ப நாளில் பலத்துப் பெரும் அபிவிருத்தியடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நம் நாட்டார் ஊக்கத்தையும் உழைப்பையும் மட்டும் கைக் கொண்டு முன்னோர் போல் தேச க்ஷேமத்தின் பொருட்டும் குடும்பக்ஷேமத்தின் பொருட்டும் பாடு படுவார்களானால் நாடெங்கும் செழித்து நம் ஜனங்கள் வறுமையடைய இடமிராது. தேசாபிமானமும் பாஷாபிமானமும் மதாபிமானமும் ஆகிய இம்மூன்றுமே நம் தேசத்தின் க்ஷேமத்துக்குக் காரணமாகும்.

ஜப்பானின் வடராஜ்யங்களிலெல்லாம் பஞ்சம் ஜனங்களை அதிகமாய் ஹிம்ஸை செய்கிறது கடந்த 60 வருஷகாலங்களாக அப்பேர்ப்பட்ட பஞ்சம் வந்ததேயில்லை. ஏறக்குறைய 680, 000 ஜனங்கள் இதனால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். இச்சமயத்தில் நாம் நம் ஜப்பானியருக்குக் கைகொடுத்து உதவவேண்டுவது இன்றியமையாதது. சென்ற யுத்தத்தால் அவர்கள் முன்னமேயே நொந்து கிடக்கிறார்கள். அத்தளர்ச்சி யில்லாவிடில் அவர்களுக்கு ஒன்றும் இலட்சியமேயில்லை. ஆகையால் நாம் சகோதர பாவம்பாராட்டித் தக்க உதவியை அளித்தல் நம் கடனாம். கீழ்நாட்டாரின் கௌரவத்தைக் காப்பாற்றிய அவர்களுக்கு நாம் என்னசெய்தாலும் தகும். சென்னை ஹிந்து ஆபீஸ் மானேஜருக்கு அனுப்பினால் அவர் அதை ஜப்பானியருக்கு அனுப்ப ஏற்பாடு செய்வார்.

பிரான்ஸில் கொலைசெய்தவனை அது நடந்த 15 வருஷத்துக்குள் பிடித்துத் தண்டிக்கலாமென்றும் அதற்கு மேற்பட்டால் அந்த தண்டனை கிடையாதென்றும் இருப்பதால் ஒருவன் 20 வருஷத்துக்கு முன் தான் கொலைசெய்திருப்பதாகவும் மறுபடியும் தன்னுடைய தேசத்துக்கு வரப் போவதாகவும் பிரான்ஸ் போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருக்கிறான்.

சென்ற 1905-ம் வருஷம் நவம்பர்மீ இஸ்கந்திரியா என்னுமிடத்தில் ஒரு பெண்பிள்ளை ஒரே சூலில் நான்கு ஆண்பிள்ளைகளையும் 3பெண்பிள்ளைகளையும் பெற்றாள். இரண்டு பெண்களும் ஒருஆண்குழந்தையும் இறந்து போயின. மற்ற நான்கு குழந்தைகளும் சுகமாகவே காணப்பட்டனவாம்.